# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 தை 20 வியாழக்கிழமை (03-02-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:59


# மாணவர்களும் தாயாரும் நேற்று விடுவிக்கப்பட்டனர்!



விடுவிக்கப்பட்ட தாயாரும் இரு பிள்ளைகளும்

## பலாலியில் வைத்து

யாழ்ப்பாணம், பெப்ரவரி 3

**குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கடந்த 25ஆம் திகதி உரும்பிராயில் இருந்து விசாரணைக்காகக் கொழும்புக்குக் கூட்டிச் செல்லப்பட்ட பாடசாலை மாணவர் இருவரும் அவர்களது தாயாரும் நேற்று மாலை பலாலியில் வைத்து விடுவிக்கப்பட்டனர். இது தொடர்பான பதிவுகள் அதன் பின்னர் கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் இடம்பெற்றன.**

வசாவிளான் ம.ம.வி. மாணவியான பிரியா ஸ்ரீஸ்கந்தராசாவும், அவரது தாயாரான வளர்மதி ஸ்ரீஸ்கந்தராசாவும் அவர்களது வீட்டில் இருந்தும் -

உரும்பிராய் சந்திரோதய வித்தியாலய மாணவன் வினோத் ஸ்ரீஸ்கந்தராசா அவரது பாடசாலையில் இருந்தும் -

அழைத்துவரப்பட்டு விசாரணைக்காக கொழும்புக்கு கூட்டிச் செல்லப்பட்டிருந்தனர்.

கொழும்பில் இடம்பெற்ற விசாரணைகளை அடுத்து விமானம் மூலம் பலாலிக்கு நேற்று நண்பகல்

(12ஆம் பக்கம் பார்க்க)

## "எனது மூத்தமகனின் தலையை நானே அடையாளம் காட்டினேன்"

### விடுவிக்கப்பட்ட தாய் பலாலியில் வைத்துத் தகவல்

யாழ்ப்பாணம்,பெப்.3

"ஜா-எலவில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் தொடர்பாக மீட்கப்பட்ட தலை எனது மகனுடையது என்று அடையாளம் காட்டினேன்"

உரும்பிராயிலிருந்து விசாரணைக்காகக் கொழும்புக்குக் கூட்டிச் செல்லப்பட்டு நேற்று விடுவிக்கப்பட்ட திருமதி வளர்மதி ஸ்ரீஸ்கந்தராசா (வயது42) மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பலாலி இராணுவத் தலைமையகத்தில் வைத்து அவர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயத்தில் கல்விபயின்ற எனது மகன் யசோதரன் 5ஆம் ஆண்டு புலமைப்பரீட்சையில் சித்தியடைந்து யாழ். இந்துக்கல்லூரியில் அனுமதி பெற்றுக் கல்விபயின்று கொண்டிருந்தார்.

படிப்பில் அதிக கவனமும் குழப்படியின்றிப் பாடசாலைக்குச் செல்வதில் அதிக சிரத்தையும் காட்டிவந்தவர் அவர். 1995 ஒகஸ்டில் ஒரு நாள் பாடசாலைக்குச் செல்வதாகக் கூறிச்சென்ற இவர் பின்னர் வீடு திரும்பவில்லை. பின்னர் அவர் விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்படுவதாக அறிந்தேன்.

கடந்த 25ஆம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் நான்கு பொலீஸார் எனது இளையமகனான வினோத்தை அவரது பாடசாலையிலிருந்து அழைத்துக் கொண்டு எனது வீட்டுக்கு வந்தனர்.

இயக்கத்தில் இணைந்த எனது மகனான யசோதரன் கொழும்பில் ஆயுதத்துடன் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனவும் அது தொடர்பான விசாரணைகளுக்காக என்னைக் கொழும்புக்கு அழைத்துச் செல்ல இருப்பதாகவும் அவர்கள் என்னிடம் தெரிவித்தனர்.

எனது கணவர் சுவிஸில் உள்ளார். எனது இரு பிள்ளைகளையும் தனித்து விட விரும்பாததால் அவர்களையும் என்னுடன் அழைத்துச்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று நாள்களின் பின் இன்று பாடசாலைகள் வழமைக்கு!

உரும்பிராய் மாணவர்கள் இருவர் கைது செய்யப்பட்டதை ஆட்சேபித்தும், அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் கடந்த மூன்று நாள்களாக தமது பாடசாலைகளைப் பகிஷ்கரித்து வந்த குடாநாட்டு மாணவர்கள், சம்பந்தப்பட்ட இருவரும் அவர்களது தாயாரும் நேற்று விடுவிக்கப்பட்டதை அடுத்து இன்று வழமைபோல் பாடசாலைகளுக்குத் திரும்புவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டுவிட்டதாக மாணவர்கள் தரப்பில் நேற்று மாலை அறிவிக்கப்பட்டது.

"சம்பந்தப்பட்ட இரு மாணவர் மற்றும் தாயாரின் விடுதலைக்கும் 'மாணவர் சக்தி மாபெரும் சக்தி' என்பதை உலகுக்கு உணர்த்தும் வகையிலும் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு அதற்கு முழு ஒத்துழைப்பு வழங்கியும் உதவிய அனைத்துப் பாடசாலை மாணவர்கள், பெற்றோர், பல்கலைக்கழக மாணவர்கள், கல்விச்சமூகம் சார்ந்த ஏனைய அமைப்புக்களின் பிரதிநிதிகள் அனைவருக்கும் எமது நன்றிகள்" என மாணவர்கள் சார்பில் நேற்று மாலை வெளியிடப்பட்ட பிரசுரம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

சம்பந்தப்பட்ட இரு மாணவர்கள் மற்றும் அவர்களின் தாயார் ஆகியோரின் சார்பில் அவர்களது குடும்ப உறவினர்களும் இத்தகைய நன்றி அறிவிப்புக் குறிப்பு ஒன்றை அனுப்பி வைத்தனர்.

(இந்த விடயம் தொடர்பாக அதிபர்கள் சங்கம் விடுத்த அறிக்கை 11ஆம் பக்கத்தில்)

## ஜெகன் நன்றி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.3

உரும்பிராய் மாணவர் இருவரையும் அவர்களின் தாயாரையும் விரைந்து விடுவிப்பதற்கு உதவி செய்தமைக்காக குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளருக்கு ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட எம்.பியான வி.கே.குகேந்திரன் (ஜெகன்) நன்றி தெரிவித்திருக்கின்றார்.

யாழ். மாணவர் சமுதாயத்தின் சார்பில் இந்த நன்றியைத் தாம் தெரிவிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்தபடி மூன்று நாள்களுக்குள் சம்பந்தப்பட்டோர் விடுவிக்கப்பட்டுள்ளனர் என ஈ.பி.டி.பி. வட்டாரங்கள் சுட்டிக் காட்டின. (உ-3)

## ஒருவர் சைகை செய்ததும் மற்றவர் குமார் மீது சுட்டார்!

### நேரில் கண்ட இருவர் பொலீஸாருக்கு சாட்சியம்

கொழும்பு,பெப்.3

"ஒருவர் சைகை செய்ய மற்றொரு நபர் தனது இடுப்பில் மறைத்து வைத்திருந்த துப்பாக்கியை எடுத்து காரில் இருந்த குமார் பொன்னம்பலத்தை நோக்கிச் சுட்டார்"

வெள்ளவத்தை இராமகிருஷ்ண றோட்டில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் காங்கிரஸ் தலைவர் குமாரின் கொலையை நேரில் கண்ட ஒருவர் மேற்கண்டவாறு சாட்சியமளித்துள்ளதாக குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளர் பந்துல விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இராமகிருஷ்ண றோட்டில் வசிக்கும் சிங்களவர் ஒருவரும் முஸ்லீம் ஒருவருமே குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலீஸாருக்கு சாட்சியங்களை அளித்துள்ளனர்.

"காலை 10.30 மணிக்கு ஆட்டோ ஒன்று பிடிப்பதற்காக நான் எனது வீட்டுக்கு வெளியே வர முயன்றேன். அப்போது எனது வீட்டில் இருந்து மூன்றாவதாக உள்ள வீட்டின் முன்னால் இரண்டு பேர் நின்றனர். அவர்களில் ஒருவர் சைகை காட்ட மற்றவர் தனது இடுப்பில் இருந்து துப்பாக்கியை எடுத்து காரில் இருந்த

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ் நகர மேயராக கந்தையனின் பெயர்

### தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.3

யாழ். மாநகரசபை மேயராக தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த செல்லன் கந்தையன் தெரிவு செய்யப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணையாளர் வர்த்தமானி அறிவிப்பு ஒன்றை வெளியிட்டிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

மேயர் பி.சிவபாலன் கொல்லப்பட்டதை அடுத்து ஏற்பட்டுள்ள வெற்றிடத்திற்கு புதிய மேயர் ஒருவரை அவர் சார்ந்த தமிழர் விடுதலைக்கூட்டணி நியமிக்காததால் மாநகரசபை உறுப்பினர்களுக்கான தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பட்டியலில் போட்டியிட்டு விருப்பு வாக்குகளின் அடிப்படையில் அதிக வாக்குகளைப் பெற்றவர் வரிசையில் உள்ள எஸ்.கந்தையனின் பெயரை தேர்தல் ஆணையாளர் புதிய மேயராக அறிவித்துள்ளார்.

மேயர் பதவியை ஏற்கவேண்டாம் என எஸ்.கந்தையனை தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப்பீடம் கேட்டிருப்பதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

### கொடைக்கானல் ஹோட்டல் வழக்கில்

## ஒரு வருட கடுங்காவல் சிறை ஜெயலலிதாவுக்கு விதிப்பு!



சென்னை,பெப்.3

தமிழ் நாட்டில் முன்னாள் முதல்வரும் அ.தி.மு.க. பொதுச்செயலருமான ஜெயலலிதாவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த கொடைக்கானல் "பிளசென்ட் ஸ்டே" ஹோட்டல் வழக்கில் அவருக்கு ஒரு வருட சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

சென்னை சிறப்பு நீதிமன்ற நீதிபதி வி. இராதாகிருஷ்ணன் நேற்று இந்தத் தீர்ப்பை வழங்கினார்.

ஜெயலலிதாவின் ஆட்சிக் காலத்தில் அரச சட்டவிதிகளுக்கு முரணாகக் கொடைக்கானலில் ஹோட்டல் கட்டுவதற்கு அனுமதி வழங்கியது தொடர்பாக கருணாநிதி தலைமையிலான தற்போதைய தமிழக அரசு இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தது. ஜெயலலிதா, அவரின் முன்னாள் அமைச்சரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான பி.எம்.செல்வகணபதி, பதவி நீக்கம் செய்யப்பட்ட ஐ.ஏ.எஸ். அதிகாரி எச்.எம்.பாண்டே, சம்பந்தப்பட்ட ஹோட்டல் செயல் இயக்குநர் ராஜேஸ் விட்டல், நிர்வாக இயக்குநர் பாளை சண்முகம் ஆகியோர் மீது இந்த வழக்கில் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

ஐந்து பேரும் குற்றவாளிகள் என்று அறிவித்த நீதிபதி ஐவருக்கும் தலா ஒரு வருட கடுங்காவல் சிறைத்தண்டனை வழங்கினார். தலா 1000 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

மேலும் ஊழல் தடுப்பு சட்டத்

(12ஆம் பக்கம் பார்க்க)

### அ.தி.மு.கவினர் வெறியாட்டம்!

## பல்கலை மாணவியர் நால்வர் பஸ்ஸுடன் சேர்த்து எரிப்பு

சென்னை, பெப்.3

ஜெயலலிதாவுக்கு எதிராக சிறைத்தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டதை அடுத்து அவரின் அ.தி.மு.கழகத் தொண்டர்கள் புரிந்த கொடூர வன்செயலில் 4 பல்கலைக்கழக மாணவிகள் பஸ்ஸுடன் சேர்த்து உயிருடன் எரிக்கப்பட்டனர்.

கோயம்புத்தூர் வேளாண் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவிகள் பயணம் செய்த பஸ்ஸை தர்மபுரிப் பகுதியில் வைத்து வழிமறித்தோர் ஈவுஇரக்கமின்றி மாணவிகளை பஸ்ஸோடு சேர்த்து எரித்தனர் என்றும் -

இதில் நான்கு மாணவிகள் உடல்கருகிப் பலியானார்கள் என்

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# வாழ்த்துகின்றோம்

இலங்கை செஞ்சிலுவைசசங்க யாழ்.கிளையின
முன்னாள் உள்ளகக் கணக்காய்வாளரும்
பொருளாளரும்
தற்போதைய கௌரவ செயலாளருமாகிய

**உயர்திரு. கோ.தியாகரராசா அவர்கள்**

**தனது மணவாழ்வில் பொன்விழாவினை 02.02.2000 அன்று கொண்டாடியதையிட்டு மனதார வாழ்த்தி மென்மேலும் சமூக சேவைகளை ஆற்ற இறையருள் கிடைக்க வேண்டுகின்றோம்.**

*இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,*
**வலிமேற்கு பிரிவு.**

மாவடி.
வட்டுக்கோட்டை.
(73344)

## நல்லடக்க ஆராதனை நன்றி நவிலல்



# செல்வி ஏஞ்சல் நடராஜா

(வட்டு. தெ.இ.தி.சபை பாலர் பாடசாலை மாணவி),

எமது பாசமிகு செல்வப் புதல்வி செல்வி ஏஞ்சல் நடராஜாவை 31.01.2000 அன்று இறைவன் தம்முடன் இணைத்துக்கொண்டார். எமது பாசமிகு மகளின் நல்லடக்க ஆராதனை 01.02.2000 செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெற்று வட்டு. தெ.இ.திருச்சபை சேமக்காலையில் அன்று பி.ப. 3.30 மணிக்கு பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

எமது ஆற்றொணாத் துயரத்தில் பங்குகொண்டு நல்லடக்க ஆராதனையை வழி நடத்திய தெ.இ.தி.சபை பேராயர், உதவிய குருமாருக்கும் எமது அன்புப் புதல்வியின் திடீர் மறைவை அறிந்து வருகை தந்த வட்டு. யாழ்ப்பாணக்கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி குடும்பத்தினருக்கும் திருச்சபை குருமார்களுக்கும் பாலர் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் பொது மக்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் எமக்கு உதவி புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- நன்றி -

**"Angel has became an ANGEL"**

**வண. நடராஜாவும் திருமதி நடராஜாவும்**
**சகோதரர் பென்ஜமின்**
**நோவா அவர்களும்.**

நுணாவில் மேற்கு (மத்தி).
சாவகச்சேரி.
(C10906)

# கண்ணீர் அஞ்சலி

**எமது திணைக்களத்தின் தலைமை அலுவலக கூ.அ.உ. ஆணையாளரும் எமது அன்புக்குரிய நண்பரும் கூட்டுறவுப் பரிசோதகர் தொழிற்சங்கச் செயலாளருமாகிய**

## இ. குருகுலசிங்கம்

**(கூ.அ.உ.ஆணையாளர், திருகோணமலை)**

அவர்கள் 30.01.2000 அன்று அமரத்துவம் எய்திய செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைகிறோம். அவரது இழப்பினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**உறுப்பினர்கள்,**
**கூட்டுறவுத் திணைக்கள நலன்புரிச் சங்கம்**
(C/10914) யாழ்ப்பாணம்.

# OBITUARY

## Mrs. Thangamany Varnakulasinghe

Regina Thangamany wife of Late J.Cyril Varnakulasinghe formerly of 'NANTHAVANAM' Vembadi Road, Jaffna. Passed away peacefully at Canada on 31.01.2000. Loving mother of Mrs. Devamalar, Sivasunderaraj, Mrs. Rubamalar, Francis, Reginold Nagulendran, late Balendran and Mrs. Inpamalar Xavier; affectionate mother - in - law of Sivasunderaraj, Reggie, Francis, Selvaranie and Terence. Proud grand mother of 11 grand children and 9 great grand children. Funeral at Canada on 5th February Saturday.

*19, Herrick Place,*
*MARKHAM,*
*Ontario,*
*L35 3B8,*
*Canada.*

Informant:
Brother
**Edwin Mariampillai,**
129, Main Street,
Jaffna.
(73327)

## கண்காட்சி

இளவாலை,பெப்.3

இளவாலை முறைசாராக் கல்விப் பிரிவினரால் நடத்தப்பட்ட உடையமைத்தல் பயிற்சிநெறியின் பூர்த்தியை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கண்காட்சி இன்று காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணிவரை இளவாலை திருக்குடும்ப கன்னியர்மட மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. (உ-7-48)

## பாடசாலை இடம் மாற்றம்

குருநகர்,பெப்.3

ஷெல் வீச்சு மற்றும் பதற்றமான சூழ்நிலை காரணமாக கொழும்புத்துறையில் இருந்து இடம்பெயர்ந்து புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தின் சில கட்டடங்களில் இயங்கி வந்த கொழும்புத்துறை புனித யோசப் வித்தியாலயம் மீண்டும் அங்கிருந்து இடம்மாற்றப்பட்டுள்ளது. இது தற்போது யாழ். மரியன்னை பேராலய வளவில் உள்ள சென். பற்றிக்ஸ் கல்லூரியின் ஸ்மித் கட்டடத்தில் இயங்கிவருகின்றது.(உ-51)

## 'ஓடியோ' நிகழ்வுத் தொடரில்

யாழ்ப்பாணம்,பெப்.3

சாந்தானந்தா சரஸ்வதி சுவாமிகளின் விரிவுரைகள் அடங்கிய ஓடியோ நிகழ்ச்சித் தொடரின் இறுதி நாளான இன்று வியாழக்கிழமை பிற்பகல் 5.15 மணி முதல் 6.15 மணி வரை 'தூய எண்ணங்கள்' எனும் தலைப்பிலான விரிவுரை ஒலிபரப்பப்படும்.

இந்த நிகழ்ச்சி இல.48, கோயில் வீதி என்னும் முகவரியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று வருகின்றது. (உ-6)

## திறப்பு விழா

யாழ்ப்பாணம்,பெப்.3

தீவகம் உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தின் உழைப்பகம் பனம் பொருள் பல்பொருள் அங்காடி திறப்புவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 10.00மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகத்தினால் இந்த பல்பொருள் அங்காடி திறந்து வைக்கப்படவுள்ளது. (இ-5)

## அறிவியல் அரங்கு

யாழ்ப்பாணம்,பெப்.3

யாழ்ப்பாணம் மாட்டின் வீதி நியூ பிறைற் கல்வி நிலையத்தில் மாதாந்தம் இடம்பெற்றுவரும் அறிவியல் அரங்கம் நிகழ்வுத் தொடரில் இந்த மாத நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். (உ-6)


**நாகம்ஸ்**
சுன்னாகம்
**கடைசிவாரம்**
**சரத்குமார்,**
**தேவயாணியின்**
* **சூரியவம்சம்**
(ரீஸ்ஸ்)
காட்சிகள்:- 10.30, 2.30
(புதிய நேரம்)
(73315)

**ராஜா**
யாழ்ப்பாணம்
ரசிகர்களே!
கடைசி வாரமாக
**அஜித் - சிம்ரன்**
மற்றும் பலர் நடித்த
**அவள் வருவாளா?**
10.30, 2.30
(C/10860)

**ஜோ.எகட்டனின்**
**ஜெசித்தாராவின்**
**கோழிப்புரியாணி**
**பிறைட்றைஸ்**
**நூடில்ஸ்**
ரூபா - 95
*ஜோ. எகட்டனின்*
*ஜெசித்தாரா*
(சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
முன் ஒழுங்கை)
சுண்டிக்குளி.
(C/10912)


# 53 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
08
-
02
-
1921



மறைவு
15
-
12
-
1999

# அம்பலவர் வேலுப்பிள்ளை

**எங்கள் குடும்பத்தின் குலதெய்வமாய் இல்லத்தின் ஒளிச் சுடராய் இருந்து 15.12.1999 இல் சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அம்பலவர் வேலுப்பிள்ளை அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் (5.2.2000) சனிக்கிழமை காலை நுனுவில் குளக்கோட்டு விநாயகர் ஆலய சூழலிலும் பின்பு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெற்றும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

திருமதி **இராசம்மா வேலுப்பிள்ளை**
(மனைவி)
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

*ஞானாசாரியார் கல்லூரி வீதி,*
*துன்னாலை மேற்கு,*
*கரவெட்டி.*
(C/10888)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராசம்மா நாகராசா

பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி இராசம்மா நாகராசா 02.02.2000 அன்று சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - குஞ்சுப்பிள்ளை தம்பதியினரின் ஏக புத்திரியும் காலஞ்சென்ற தம்பையா நாகராசாவின் அன்பு மனைவியும் சண்முகராசா(ஜேர்மனி), தனபாலசிங்கம்(கொழும்பு), யோகராணி(ஜேர்மனி) மனோராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் வடிவாம்பாள், விருதுசாரணி, இரத்தினகுமார், உதயகுமார் ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.02.2000) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று கொக்குவில் இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**இ.யோகராணி**
(மகள்)

*பொற்பதி 2ஆம் ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு.*
(73351)

## நல்லையா சற்குணானந்தன்

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட நல்லையா சற்குணானந்தன் ஜேர்மனியில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லையா - தங்கரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும், திவ்வியஜெனியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தையா - திரவியப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் தர்சினியின் அருமைத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.02.2000) வியாழக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

தகவல்:
**உறவினர்கள்.**

*சிவன்வீதி,*
*உரும்பிராய்.*
(73352)

## ஜோய் கவின்சன் பேணாட்

(J.K.பேணாட்)

**(மாணவன், G.C.E O/L பரியோவான் கல்லூரி - சுண்டிக்குளி)**

யாழ்ப்பாணம் இலக்கம் 18, கச்சேரி - நல்லூர் வீதியைப் பிறப்பிடமாகக்கொண்ட திரு.திருமதி பேணாட் - நேசவதனி அவர்களின் அன்புமகன் செல்வன் ஜோய் கவின்சன் பேணாட் 01.02.2000 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

இவர் ஜோய் சுதர்சன் பேணாட்(பழைய மாணவன், பரியோவான் கல்லூரி), ஜோய் டினிசியா பேணாட், ஜோய் டிலக்சியா பேணாட் (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), ஜோய்சன் மோஷே (பரியோவான் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் திரு.திருமதி கெனித் பரிங்டன்(கிற்றார் மாஸ்ரர், பழையமாணவன், பரியோவான் கல்லூரி), திரு.திருமதி அன்ரன் சாள்ஸ் நேசவனிதா(கனடா), திரு.திருமதி சிறி - நேசவனஜா (கனடா) திரு.திருமதி கண்ணன் நேசவசந்தா(கனடா) ஆகியோரின் அன்புப் பேரமகனும், கந்தையா - நேசமலர்(கனடா) திரு.திருமதி ஏ.ஜெ.செல்வரெத்தினம் (செல்வா - யாழ்.ப.நோ.கூ.சங்க கிளை - 27 இன் கிளைக்குழுத் தலைவர்) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (03.02.2000) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு இலக்கம் 78/5, W.A. சில்வா மாவத்தை இலங்கை பெந்தகோஸ்தே சபையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், விசுவாசிகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
A.J.செல்வரெத்தினம் (செல்வா)
(பேரன்)
18, கச்சேரி - நல்லூர் வீதி
T.P: 2429 - 3252

T.P: 01 582521
077 - 351367
42A, பாமன்கடை,
கொழும்பு.
(C/10916)

# இந்திய-பாக். நெருக்கடி

# 3 ஆம் உலக யுத்தமாகலாம்

## குஜ்ரால் எச்சரிக்கிறார்

புதுடில்லி, பெப். 3

பாகிஸ்தான் — இந்தியா ஆகிய நாடுகளுக்கு இடையில் ஏற்பட்டுள்ள சர்ச்சை மூன்றாவது உலக யுத்தத்துக்கு இட்டுச் செல்லும் என்று கூறியுள்ளார் இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்தர் குமார் குஜ்ரால்.

இலங்கையில் விஜயம் மேற்கொண்டுள்ள அவர் செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையில் இதைக் கூறினார்.

இரு நாடுகளும் கடைப்பிடிக்கும் கடும் போக்கைக் கைவிடவேண்டும் என்றும் —

சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்றும் — அவர் கோரிக்கை விடுத்தார்.

1997 ஆம் ஆண்டு தாம் பிரதமராக இருந்த சமயம் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப்புடன் நடத்திய சந்திப்பின் போது இரு நாடுகளுக்கும் இடையில் உருவான உறவில் இன்று விரிசல் ஏற்பட்டு விட்டது என்றும் அவர் கூறினார்.

(இ-3)

## 'மிர்' விண்கலத்துக்கு புத்துயிர் அளிக்கத் திட்டம்

மொஸ்கோ, பெப். 3

கடந்த 13 வருடங்களாக விண்வெளியில் வலம் வரும் 'மிர்' விண்கலத்துக்கு புதிய வீரர்களை அனுப்ப ரஷ்ய விஞ்ஞானிகள் திட்டம் வகுத்துள்ளனர்.

இந்தத் திட்டத்தின் ஒரு முயற்சியாக எரிபொருள், தண்ணீர் மற்றும் கருவிகள் கொண்ட சரக்கு விண்கலம் ஒன்றை நேற்று முன்தினம் ரஷ்யா அனுப்பியுள்ளது

இந்தச் சரக்கு விண்கலம் நாளை 'மிர்' விண்கலத்துடன் இணையும் என விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

'மிர்' விண்கலத்தின் உள் பகுதியில் அமுக்கம் குறைந்துள்ளது எனத் தெரிவித்த விஞ்ஞானிகள் சரக்கு விண்கலம் மூலம் அனுப்பப்படும் கருவிகள் மூலம் அது நிவர்த்தி செய்யப்படும் என்று சொன்னார்கள்.

தொடர்ந்து ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள வீரர்கள் அனுப்பப்படுவர் என்றும் அவர்கள் கூறினர்.

## நீதிமன்று முன் ஆர்ப்பாட்டம்

நியூயோர்க், பெப். 3

அமெரிக்காவில் நியூயோர்க்கில் உள்ள நீதிமன்றம் ஒன்றின் முன் நூறுக்கு மேற்பட்டவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

மேற்கு ஆபிரிக்க நாடான கினியைச் சேர்ந்த கறுப்பினத்தவர் ஒருவரைக் கொலை செய்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட வெள்ளை இனத்தைச் சேர்ந்த 3 பொலிஸாரும் தமது குற்றத்தை ஏற்க மறுத்ததைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

(இ-3)

# குறோஸ்னியின் முக்கிய பகுதிகள்

# ரஷ்யப்படைகள் வசம் வீழ்ச்சி!

## தலைநகரின் பிரதான சதுக்கத்தில் ரஷ்யக் கொடி

குறோஸ்னி, பெப். 3

செச்சினியத் தலைநகர் குறோஸ்னியின் முக்கியபகுதிகள் யாவும் தம்வசம் வந்து விட்டதாக ரஷ்யத் தளபதிகள் அறிவித்துள்ளனர்.

கடந்த ஒருமாத காலம் தொடர்ந்த இந்தச் சண்டையில் தீவிரவாதிகளை விரட்டி தலைநகர் குறோஸ்னியை முழுக்கட்டுப்பாட்டில் தமது படைகள் கொண்டு வந்துள்ளன என்றும்—

தலைநகரில் உள்ள முக்கிய சதுக்கத்தில் ரஷ்யக் கொடி ஏற்றப்பட்டு விட்டது என்றும் — ரஷ்யப்படைகளின் தளபதிகள் அறிவித்துள்ளனர்.

ஆனால் அங்கு தொடர்ந்து விமான மற்றும் பீரங்கித் தாக்குதல்களின் சத்தங்கள் கேட்டுக்கொண்டிருப்பதாக செச்சினிய எல்லையில் தங்கியுள்ள பி. பி. ஸி. செய்தியாளர் தெரிவிக்கின்றார்.

ரஷ்யப்படைகளின் அறிவிப்பை உறுதிசெய்ய முடியாதுள்ளது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இந்தச் சண்டையில் ஆயிரம் படையினரை இழந்து விட்டதாக ரஷ்யா உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

சுமார் 2 ஆயிரத்து 500 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் ரஷ்யா தெரிவித்துள்ளது. (இ-3)

## செச்சினியாவில் யுத்தம் முடிவடையும் நிலையில்!

### அமெரிக்காவுக்கு ரஷ்யா தகவல்

மொஸ்கோ, பெப். 3

செச்சினியா மீதான யுத்தம் முடிவுறும் நிலையை எட்டியுள்ளது என்று ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் இக்கோ ஈவனோ தெரிவித்துள்ளார்.

மொஸ்கோவுக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் திருமதி மெடலின் ஆல்பிறைற்றிடமே அவர் இப்படிக் கூறியுள்ளார்.

உத்தியோகபூர்வமாக இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இப்படிக் கூறியுள்ளார்.

''செச்சினிய யுத்தம் உள்நாட்டுப் பிரச்சினையாக இருந்தபோதும் உலக நாடுகளைப் பெரிதும் கவர்ந்து விட்டது உலக நாடுகள் மட்டத்தில் ரஷ்யாவுக்குப் பெரும் தாக்கத்தை இந்த யுத்தம் ஏற்படுத்திவிட்டது'' என்று மெடலின் ஆல்பிரைற் கருத்து வெளியிட்டுள்ளார்.

(இ-3)

## தந்திரோபாயமாக வாபஸ்; தீவிரவாதிகள் அறிவிப்பு

குறோஸ்னி, பெப். 3

''எமது சுதந்திரப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தும் நோக்குடன் தந்திரோபாயமாகப் படைகளை விலக்கியுள்ளோம்'' என்று செச்சினியத் தீவிரவாதிகள் அறிவித்துள்ளனர்.

செய்தி ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிவிப்பு ஒன்றிலேயே தீவிரவாதிகள் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளனர்.

இந்த அறிவிப்பை உறுதிப்படுத்தவோ, மறுக்கவோ ரஷ்யத் தளபதிகள் முயற்சிக்கவில்லை என்றும்—

தீவிரவாதிகள் மீண்டும் அணி திரளுவதை அனுமதிக்கப்போவதில்லை என்றும்— ரஷ்யத் தளபதிகள் கூறியதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

தீவிரவாதிகள் படைகளை வாபஸ் பெற்று மலைப் பகுதிகளில் உள்ள மறைவிடங்களில் தங்கியிருக்கலாம் என்றும் —

கெரில்லா முறையிலான தாக்குதல்களை அவர்கள் தீவிரமாக்கலாம் என்றும் —

ரஷ்யப் படைகள் அதற்கு அதிக விலை கொடுக்க வேண்டி வரும் என்றும் — பி. பி. ஸி. தனது கண்ணோட்டத்தில் குறிப்பிட்டது.

(இ-3)

## பார்வைக்கு

உலக அரங்கில்

லண்டன், பெப். 3

இங்கிலாந்து நாட்டின் பக்கிங்காம் அரண்மனையின் அரச நடன அறை பொது மக்கள் பார்வைக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து நாட்டில் அரச பரம்பரைக்குச் சொந்தமான இந்த அரண்மனையில் உள்ள பெரிய அறை அரச மண்டபம். இது 19ஆம் நூற்றாண்டின் மத்தியில் விக்டோரியா மகாராணி காலத்தில் கட்டப்பட்டது.

35 இரண்டு அடுக்கு பஸ்களை நிறுத்தி வைக்கும் அளவுக்கு பெரிய அறையான இந்த நடன அறை அழகானது.

இதன் தூண்கள் தங்கத்தால் ஆனவை. சிவப்புக் கம்பளங்களும் ராஜமேடையும் தொங்கு விளக்குகளும் உள்ள இந்த அறை பெரிய கேளிக்கை நிகழ்ச்சிகளின் போது மட்டும் திறக்கப்படுவது வழமை.

கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதல் இந்த அரச நடன அறை பொதுமக்கள் பார்வைக்காக திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (இ-க)

## வைத்திய சிகிச்சை மூலம் 115 பேரைக் கொன்ற டாக்டர்!

லண்டன், பெப். 3

பிரிட்டனில் 15 வயோதிபர்களைத் தவறான ஊசி ஏற்றிக் கொலை செய்த குற்றத்துக்கு ஆயுள்தண்டனை அனுபவித்து வரும் டாக்டருக்கு எதிராக மேலும் நூறு பேரைக் கொலை செய்த குற்றம் சுமத்தப்படவிருக்கின்றது.

பிரிட்டனைச் சேர்ந்த ஹரோல்ட் சிப்மன் என்ற டாக்டர் 15 வயோதிபர்களுக்குத் தவறான ஊசியை ஏற்றி அவர்களைக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட வழக்குகளில் அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

அவருக்கு எதிரான விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் மேலும் சுமார் நூறு பேரை அவர் தமது வைத்திய சிகிச்சை மூலம் கொலை செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

விரைவில் அந்தக் கொலைகள் தொடர்பாக வழக்குகள் பதிவு செய்யப்படவிருக்கின்றன. (இ-3)

## ஜகார்த்தாவில் ஆர்ப்பாட்டம்

ஜகார்த்தா, பெப். 3

இந்தோனேசியாவுக்கு வெளிநாட்டு உதவிகள் வந்து குவிவதைக் கண்டித்து நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள், தொழிலாளர்கள் ஜகார்த்தாவில் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்

வெளிநாடுகள் கடன் வழங்குவது தம்மை அடிமைப்படுத்த எடுக்கும் நடவடிக்கை என்றும் —

நாட்டை அடகு வைக்க எடுக்கும் முயற்சிக்கு உறுதுணையாக இருக்கமாட்டோம் என்றும் — ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷம் எழுப்பியவாறு வீதிகளில் திரிந்தனர்.

வெளிநாட்டு உதவிகள் வருவதை நிறுத்த வேண்டும் இல்லையேல் தொடர் போராட்டம் நடத்துவோம் என்று அவர்கள் அரச அதிகாரிகளிடம் தெரிவித்தனர்.

அதேநேரம் — உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் உரையாற்றிய துணை அதிபர் மேகவதி சுவர்ண புத்திரி நாட்டை வளம்படுத்த உதவிகளை வழங்குமாறு கோரியுள்ளார்.

(இ-3)

## வன்முறையைத் தூண்டவில்லை என்கிறார் விரான்டோ

''கிழக்குத் திமோரில் மக்களை சுதந்திரத்துக்கு தயாராக்கினேன். அங்கு நான் வன்முறைக்குத் தூபம் இடவில்லை. எனவே நான் பதவி விலக வேண்டிய அவசியம் இல்லை.''

இப்படிக் கூறியுள்ளார் இந்தோனேசியாவின் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் விரான்டோ.

கிழக்குத் திமோரில் இடம் பெற்ற வன்முறைகளுக்குப் பொறுப்பேற்று பதவி விலக வேண்டும் என்று அவருக்கு ஜனாதிபதி அப்துல் ரஹுமான் விடுத்த கோரிக்கைக்கே இப்படிப் பதிலடி கொடுத்துள்ளார் அவர்.

ஜகார்த்தாவில் அவர் நேற்று முன்தினம் கூட்டிய செய்தியாளர் மாநாட்டிலேயே இப்படிக்கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:

நான் பதவி விலக வேண்டிய அவசியம் இல்லை. கற்பனைகளுக்கும் ஊகங்களுக்கும் அடிபணிய மாட்டேன்.

அங்கு அமைதிக்காகப் பாடுபட்டேன். சுதந்திரத்துக்காக மக்களைத் தயார்ப்படுத்தினேன். எக்காரணம் கொண்டும் நான் பதவி துறக்கப் போவதில்லை — என்றார்.

கிழக்குத் திமோரில் இடம் பெற்ற வன்செயல்களுக்கு ஜெனரல் விரான்டோவும் ஐந்து ஜெனரல்களும் பொறுப்பேற்க வேண்டும் என்று அங்கு விசாரணை நடத்திய ஆணைக்குழு அரசுக்கு சிபார்சு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# இஸ்ரேல்-சிரிய பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகா!

## இஸ்ரேல் பிரதமர் அறிவிப்பு

ஜெருசலேம், பெப். 3

இஸ்ரேலுக்கும் சிரியாவுக்கும் இடையிலான பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படமாட்டாது என்று இஸ்ரேல் பிரதமர் எகுட் பராக் அறிவித்துள்ளார்.

இஸ்ரேல் படையினர் மூவரை ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் கொலை செய்த சம்பவத்தை அடுத்தே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

ஹிஸ்புல்லா தீவிரவாதிகளை சிரியா அடக்கும் வரை இரு நாடுகளுக்கும் இடையிலான பேச்சுக்கள் ஆரம்பிக்க வாய்ப்பு இல்லை என்றும் பராக் கூறியுள்ளார்.

இஸ்ரேலுக்கும் சிரியாவுக்கும் இடையிலான பேச்சுக்கள் அண்மையில் அமெரிக்காவில் ஆரம்பமாகியிருந்தன.

முதல் கட்டப் பேச்சுக்களில் இஸ்ரேல் பிரதமர் அளித்த வாக்குறுதிகளால் இஸ்ரேல் கூட்டணி அரசுக்குள் நெருக்கடி ஏற்பட்டதை அடுத்து பேச்சு நிறுத்தப்பட்டிருந்தது.

இஸ்ரேல் வீரர்கள் கொல்லப்பட்ட சம்பவத்துடன் பேச்சுக்கள் முற்றாகவே நின்று விட்டன என்று அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டனர்.

(இ-3)

# முகாம்களில் உள்ள குடும்பங்களுக்கு உலக உணவுத் திட்ட நிவாரணம்

வலி. கிழக்கு, பெப். 3

யாழ். மாவட்டத்தில் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வசித்து வரும் குடும்பங்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவு நிவாரணம் வழங்க உலக உணவுத்திட்ட நிறுவனம் முன் வந்துள்ளது.

அரிசி, சீனி, பருப்பு, தேங்காய் எண்ணெய், உப்பு, திரிபோஷமா போன்ற உலர் உணவுப்பொருள்களே மொத்தம் 3 ஆயிரம் ரூபா பெறுமதிக்கு — மாதாந்தம் வழங்கப்படவுள்ளன.

இதன் பொருட்டு பிரதேச செயலர் பிரிவு ரீதியாக இந் நிறுவனம் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள குடும்பங்களின் விவரங்களைத் திரட்டி வருகின்றது:

(ஐ-180)

## விரைவில் பரீட்சை முடிவு

யாழ்ப்பாணம், பெப். 3

தீவக வலய முறைசாராக் கல்விப் பிரிவினரால் கடந்த வருடம் நடத்தப்பட்ட கணனி, தட்டச்சுப் பயிற்சி நெறிகளின் இறுதிப் பரீட்சை முடிவுகள் விரைவில் வெளியிடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது முறைசாராக் கல்விக்குப் பொறுப்பான உதவிக்கல்விப் பணிப்பாளர் அ. சண்முகநாதன் இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார். (ஐ-7)

## சேவைக்கால செயலமர்வு

யாழ்ப்பாணம், பெப். 3

தீவக வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் பணியாற்றும் சகல பாடங்களுக்குமான ஆசிரியர்களுக்கு ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் போயா விடுமுறை நாள்களிலும் சேவைக்கால பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)

## சோளம் கொள்வனவுக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், பெப். 3

ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தின் அனுசரணையுடன் சாவகச்சேரி, கைதடி ஆகிய இடங்களில் உற்பத்தி செய்யப்பட்ட சோளத்தை கிலோ 25 ரூபாவுக்கு கொள்வனவு செய்வதற்கு யாழ். மாவட்ட கமநல சேவைகள் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

பொத்திகளில் இருந்து நீக்கிய தரமான சோளத்தை வைத்திருப்போர் தமது பகுதி கமநல சேவை நிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-10)

## உலர் உணவு நிவாரணம் விநியோகம்

வலி. கிழக்கு, பெப். 3

கோப்பாய், நல்லூர் பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களில் இம் மாதத்துக்குரிய — 83 ஏ, பி புள்ளிக்குரிய — நிவாரணப் பொருள்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் விநியோகிக்கப்படவுள்ளன.

அடுத்த ஒரு வாரத்தினுள் நிவாரணத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

(ஐ-180)

## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு 02 — 09 — 1946

இறப்பு 03 — 02 — 1997

### திருமதி கபிரியல்பிள்ளை மேரிகிளாறா
(றஞ்சிதம்)

எங்கள் அன்புத் தாயே!
ஒன்றென்ன, இரண்டென்ன பல
ஆண்டு சென்றிடினும்
ஆறாதம்மா உங்கள் பிரிவுத்துயர்
எங்கள் மனக்கண் ணுலகில்
வாடா மலரம்மா உங்கள் உருவம்
உங்கள் ஆன்மா சாந்தியடைய
தினமும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


பிரிவால் துயருறும்


**மக்கள், மருமகள், பேரப்பிள்ளைகள்.**

5 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். (73321)

## நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

45 ஆம் நாள் 31 ஆம் நாள்





### சின்னத்தம்பி சிற்றம்பலம்
மலர்வு: 04 - 04 - 1914
உதிர்வு: 21 - 12 - 1999

### சிவபாக்கியம் சிற்றம்பலம்
மலர்வு: 06 - 03 - 1925
உதிர்வு: 05 - 01 - 2000

எமது குடும்பத் தலைவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (04-02-2000) வெள்ளியன்று நண்பகல் 12 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அன்றைய தினம் அவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோரை அன்புடன் அழைக்கின்றோம்.

**பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,**
**சு. நரநாராயணமூர்த்தி (மருமகன்)**

முத்துமாரி அம்மன் கோயிலடி,
கோப்பாய் மத்தி,
கோப்பாய். (73088)

## குருநகரில் கடலுணவு பதனிடும் தொழிற்சாலை

### சுவீடன் நிதி உதவி வழங்கும்

யாழ்ப்பாணம், பெப். 3

கடலுணவுப் பொருள்களை பதப்படுத்தி வெளிமாவட்டங்களுக்கு அனுப்பும் தொழிற்சாலை ஒன்றை மூன்று கோடி ரூபா செலவில் குருநகரில் அமைக்க யாழ். செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த சுவீடன் தூதரகத்தைச் சேர்ந்த உயரதிகாரிகள் குழுவிடம் இந்தத் தொழிற்சாலையை அமைக்க உதவி கோரப்பட்டுள்ளது.

கொள்கை அளவில் இந்தத் தொழிற்சாலைக்கு நிதி வழங்க அவர்கள் இணக்கம் தெரிவித்ததாகவும்—

தமது அரசுடன் ஆராய்ந்து விரைவில் நிதி வழங்க நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்திருந்தனர் என்றும் — யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நண்டு, இறால், கடலட்டை ஆகியவற்றைப் பதனிடவே இந்தத் தொழிற்சாலை அமைக்கப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## திட்டங்களைப் பூர்த்தி செய்ய மார்ச் மாதம் வரை அவகாசம்

### அகதிகளுக்கான ஐ. நா, தூதரகம் வழங்கியது

யாழ்ப்பாணம், பெப். 3

குடாநாட்டில் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் உதவியுடன் கடந்த வருடம் திட்டமிடப்பட்டு பூர்த்தியாகாததிட்டங்களை எதிர்வரும் மார்ச் மாதம் வரை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ். செயலகம் மூலமாக நூற்றிப்பதினாறு திட்டங்கள் இனங்காணப்பட்டு குடாநாட்டின் பல பாகங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

அந்தத்திட்டங்களில் 80 சதவீதமான திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

இன்னமும் பூர்த்தி செய்யப்படாத திட்டங்களை மார்ச் மாதத்துக்கு முன்னர் பூர்த்தி செய்ய வேண்டும் என்றும்—

அதன் பின்னர் எக்காரணம் கொண்டும் காலநீடிப்பு வழங்க முடியாது என்றும்—

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் யாழ். செயலகத்துக்குத் தெரிவித்துள்ளது.

(இ-3)

## ஊழியர் விவரம் மீளாய்வு

யாழ்ப்பாணம், பெப். 3

லங்கா சிமெந்து நிறுவன ஊழியர்களின் ஊழியர் விவரக்கோவைகள் மீளாய்வுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இந்த நிறுவன ஊழியர்கள் தமது பிறப்புப் பதிவுப் பத்திர மூலப் பிரதியினையும் தேசிய அடையாள அட்டையின் புகைப்படப் பிரதியினையும் இணுவிலில் இயங்கும் தற்காலிக அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

## தீவக கல்வி அதிகாரிகள் குழு பாடசாலைகளில் கண்காணிப்பு

யாழ்ப்பாணம், பெப் 3

தீவகக் கல்வி வலயத்தைச் சேர்ந்த கல்வி அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று மேற்படி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்குத் திடீர் விஜயங்களை மேற்கொண்டு கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளைக் கண்காணித்து வருகிறது.

இந்த வகையில் கடந்த மாத இறுதியில் நயினாதீவு, அனலைதீவுப் பகுதியைச் சேர்ந்த பாடசாலைகளில் குழு மேற்பார்வை மேற்கொள்ளப்பட்டது. இந்த மாத இறுதிக்குள் நெடுந்தீவு மற்றும் எழுவைதீவுப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் குழு மேற்பார்வை இடம்பெறவுள்ளதாக கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் அ. ஸ்ரனிஸ்லாஸ் தெரிவித்தார்.

இந்தக் குழு மேற்பார்வை மூலம் கல்வி சம்பந்தமான பிரச்சினைகள் இனங்காணப்பட்டு அவற்றுக்கு உடனடித் தீர்வு காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ-7)

## மீசாலையில் திருவாசக விழா

தென்மராட்சி திவ்ய ஜீவன சங்கத்தின் திருவாசக விழா மீசாலை சித்திரவேலாயுதர் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2. 00 மணிக்கு நடைபெறும்

ஆலய இந்து மன்றத் தலைவர் செ. மகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் ''தெய்வம் என்பதோர் சித்தம்'' என்னும் தலைப்பிலும் சைவப்புலவர் சி. கா. கமலநாதன் ''சிவமாக்கும் திருவாசகம்'' என்னும் தலைப்பிலும் தெய்வீகப் பேருரை நிகழ்த்துவர்.

மீசாலை கிருஸ்ணசாமி குழுவினரின் ''ஏன் இந்தக் கோலம்'' என்னும் பொருளிலான கலை நிகழ்வும் இடம்பெறும். (இ-117)

## கட்டட தொழில்நுட்ப பயிற்சிநெறி

யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் கட்டட தொழில் நுட்பவியல் என்னும் விசேட பயிற்சிநெறி இவ்வாண்டு ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஜி. சி. ஈ. (சாதாரண தர) பரீட்சையில் தமிழ், கணிதம் உட்பட ஆறுபாடங்களில் சித்தி அடைந்தவர்கள் இந்தப் பயிற்சிநெறியில் சேர்ந்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. இப்பயிற்சி நெறியில் பயிலும் மாணவர்களுக்கு நாளாந்த கொடுப்பனவும் அரசினால் வழங்கப்படும்.

இதேவேளை இந்த ஆண்டுக்கான சகல பயிற்சி நெறிகளும் 7ஆம் திகதி ஆரம்பமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது (இ-10)

## ஓய்வூதியம்

சுய தொழிலில் ஈடுபட்டுள்ள அந்தணர்கள் 60 வயதில் ஓய்வூதியம் பெறும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க யாழ்ப்பாணம் 'நியந்தரி' அமைப்பு முன் வந்துள்ளது.

இந்தத் திட்டத்தில் இணைந்து கொள்ள விரும்பும் அந்தணர்கள் தமது பகுதிக் கிராம சேவை அலுவலருடன் தொடர்பு கொண்டு உரிய படிவத்தைப் பெற்று விண்ணப்பிக்குமாறும் —

தேவையான உதவிகளையும், ஆலோசனைகளையும் நியந்திரி உறுப்பினர்களிடம் பெற்றுக்கொள்ளுமாறும் நியந்திரி சேவையின் செயலாளர் ந. சதாசிவஐயர் அறிவித்துள்ளார். (இ-152)




# பாடசாலை மட்ட அதிரடிச் சதத்துக்கு பற்குணராஜா வெற்றிக்கிண்ணம்

யாழ்ப்பாணம், பெப். 3

பாடசாலை மட்டத்தில் 19 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான கிரிக்கெட் ஆட்டங்களில் வேகமாக சதம் அடிக்கும் வீரருக்கு 'பற்குணராஜா வெற்றிக்கிண்ணம்' வழங்கப்பட உள்ளதாக சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் அறிவித்துள்ளது.

யாழ். மத்திய கல்லூரியில் 1963 - 67 காலப்பகுதியில் அணியில் விளையாடிய பற்குணராஜா 1966 இல் 19 வயதுக்கு உட்பட்ட யாழ். மத்தியகல்லூரி கிரிக்கெட் அணிக்குத் தலைமை வகித்தவர்.

52 நிமிடங்களில் இவர் அடித்த சதம் இலங்கையில் 19 வயதுக்கு உட்பட்ட அணி வீரர் பெற்ற அதிவேகமான சதம் ஆகும்.

பாடசாலை மட்டத்தில் எந்தப் பாடசாலை அணி வீரராவது குறைந்த பந்துகளில் சதம் அடித்தால் அவருக்கு, சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் வருடந்தோறும் நடத்தும் டொனால்ட் கணேஷ் வெற்றிக்கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டித் தொடரின் பரிசளிப்பு விழாவில், பற்குணராஜா வெற்றிக்கிண்ணம் வழங்கப்படுகிறது

சதம் அடித்த ஆட்டத்துக்கு மத்தியஸ்தம் வகித்த நடுவர்கள் மற்றும், பாடசாலை அதிபர் அல்லது பயிற்றுநர் ஆகியோரின் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தை செயலாளர், சென்றலைட்ஸ்விளையாட்டுக்கழகம், மே/பா அதிபர், யாழ். மத்திய கல்லூரி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகத் தலைவர் கேட்டுள்ளார்.

(இ-8)

## யாழ். பஸ் நிலையப் பகுதி

# தற்காலிககடைகளை அகற்றுவது தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப். 3

யாழ். பஸ் நிலையப் பகுதியில் அமைந்துள்ள தற்காலிகக் கடைகளை அகற்றுவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று 7 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ். மாநகரசபை ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இந்தக் கலந்துரையாடலின் போது குறிப்பிட்ட கடைகளுக்குப் பதிலாக மாற்று இடம் வழங்கப்பட சத்திரத்துச் சந்திக்கு மேற்குப் புறத்தில் உள்ள கடைத் தொகுதி வரைபடம் கடை உரிமையாளர்களுக்கு காண்பிக்கப்படவுள்ளதாக யாழ். மாநகர சபை ஆணையாளர் தெரிவித்தார்.

ஏற்கனவே 16 கடைகளுக்கும் இலக்கங்கள் இடப்பட்டுள்ளன என்றும் கலந்துரையாடல் அன்று சீட்டுக் குலுக்கல் மூலம் அவரவர்களுக்கு உரிய கடைகள் தெரிவு செய்யப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கடைகள் அனைத்தும் மாநகர சபையின் விதிகளுக்கு அமைவாகவே அமைக்கப்பட வேண்டும் எனவும் எதிர்வரும் காலங்களில் நவீன சந்தை அமைக்கப்படும் பொழுது குறிப்பிட்ட 16 பேருக்கும் இடங்கள் ஒதுக்குவதில் முன்னுரிமை வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

மேற்படி கலந்துரையாடலில் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பிரதிநிதிகள்; வணிகர் கழக நிர்வாகப் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

(இ-10)

# இலவச சிகிச்சை

வடமராட்சி, லயன்ஸ் கழக ஏற்பாட்டில் கரவெட்டி மத்திய மருந்தகத்தில் எதிர்வரும் 6 ஆம் திகதி காலை இலவச கண், பல், நீரிழிவு சிகிச்சை முகாம் அமைக்கப்படவுள்ளது.

(இ-109)

# லங்காஷயர் அணியில் சௌரவ் கங்குலி!

புதுடில்லி, பெப். 3

இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னணித் துடுப்பாட்ட வீரர் சௌரவ் கங்குலி லங்காஷயர் அணிக்கு விளையாடுவதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

அண்மைக்காலமாக இந்திய அணி தோற்குதோ என்னவோ தனிப்பட்ட ஆட்டத்தில் மெய்மறந்து ஆடிவருபவர் இவர். ஆனால் இந்திய அணியைப் பொறுத்த வரை இந்திய அணி தோற்கும் ஆட்டங்களில் இந்திய அணியில் நன்றாக ஆடுபவர் அணியில் நிலைப்பதில்லை. இதற்கு ஜடேஜா, விக்ரம் ரதோர், ராகுல் சங்வி, சாய்ராஜ் பௌத்லே ஆகியோர்சான்று. ஆனால் கங்குலியைப் பொறுத்தவரை இது விதிவிலக்காகிவிட்டது.

லங்காஷயர் அணியில் இவ்வருடம் இலங்கை அணி வீரர் முத்தையா முரளிதரன் விளையாடவில்லை. அவரது இடத்துக்கே கங்குலி ஒப்பந்தமாகியுள்ளார். இவ்வருடம் இலங்கை அணி அதிக ஆட்டங்களில் கலந்து கொள்வதே முரளி லங்காஷயர் அணிக்கு விளையாடாமைக்குக் காரணம் ஆகும்.

(இ-8)

# மரடோனா மீண்டும் சிக்கலில்!

ஹவானா, பெப். 3

உதைபந்தாட்டத்திலும் சரி தனிப்பட்ட வாழ்க்கையிலும் சரி சர்ச்சைக்குரியவராகக் கருதப்படும் மரடோனா தற்போது வேறொரு சிக்கலில் மாட்டிக் கொண்டுள்ளார்.

ஆர்ஜன்ரீன புனர்வாழ்வு வைத்தியசாலையில் போதை வஸ்து பாவித்ததன் விளைவாகச் சிகிச்சை பெற்று வந்த இவர் மேலதிக சிகிச்சைக்காக கியூபா கொண்டு செல்லப்பட்டார்.

அங்கு பத்திரிகையாளர் ஒருவருடைய கார்க் கண்ணாடியை உடைத்து நொருக்கியதாக இவர், மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

ஆறு வருடங்களுக்கு முன்னர் பத்திரிகையாளர் ஒருவரைத் துப்பாக்கியால் சுட்ட குற்றத்துக்காக இவர் மூன்று வருடங்கள்சிறைத்தண்டனை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(இ-8)

# வலைப்பந்தாட்டச்சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், பெப். 3

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்டு வரும் 2000 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு புனித அந்தோணியார் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தச் சுற்றுப் போட்டியில் அண்ணா முன்னேற்ற வி. க., மகமாரி வி. க., சோலையான் வி.க., இருதயராஜா வி. க., அண்ணா வி க., காந்திஜி வி. க., ஆகியவற்றின் அணிகள் பங்குபற்றவுள்ளன.

(இ-4-8)

# சுப்றா வெற்றிக்கிண்ண மென்பந்து கிரிக்கெட்

யாழ்ப்பாணம், பெப். 3

சித்தன்கேணி 'சுப்றா' கல்வி நிறுவனம் நடத்தும் 'சுப்றா 2000' வெற்றிக்கிண்ணத்துக்கான மென்பந்துக் கிரிக்கெட் போட்டித் தொடர் நாளை காலை 8.30 மணிக்கு சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

நாளை நடைபெறும் ஆட்டங்களில் முதல் சுற்றில் விவேகானந்தா வி. க. அணியுடன் சிவப்பிரகாசா வி. க அணியும், சங்கானை மாவடி வி. க. அணியுடன் சித்தன்கேணி வி.க. அணியும், உதயசூரியன் வி. க. அணியுடன் வடலியடைப்பு வை. எம். எச். ஏ. வி.க அணியும், கழுவத்துறை 'ஏ' வி. க. அணியுடன் விக்டோரியன்ஸ் வி.க அணியும். கலைவாணி வி.க அணியுடன் சங்கானை வை. எம். எச். ஏ. வி.க அணியும், விக்டோரியன்ஸ் 'பி' கலைமகள் வி. க. அணியும், கழுவத்துறை 'பி' வி.க அணியுடன் எம்.பி.எஸ்.எஸ் 'பி' வி.க அணியும், றெமிங்ரன் 'ஏ' வி. க. அணியுடன் சுப்றா 'பி' வி.க அணியும், நிலாவொளி வி. க அணியுடன் இளைய நட்சத்திரம் வி. க. அணியும், நாவலர் வி. க, அணியுடன் சுப்றா 'ஏ' வி. க. அணியும், வை. எம்.எச்.ஏ. வி.க. அணியுடன் சுப்றா 'ஸி' வி.க அணியும். எம்.பி.ஸீ எஸ்.வி.க. அணியுடன் றெமிங்ரன் 'பி' வி.க. அணியும் மோதுகின்றன.


# மிருதங்க அரங்கேற்றம்



பிரம்மஸ்ரீ அ.நா. சோமஸ்கந்தசர்மா (M. Phil)
அவர்களின் மாணவன்

## செல்வன் லக்மன் சத்தியமூர்த்தி

அவர்களின்
மிருதங்க அரங்கேற்றம் 04-02-2000 வெள்ளிக்கிழமை
பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறும்.

இடம்: ஸ்ரீதுர்க்காதேவி மணிமண்டபம், நல்லூர்.

தலைவர்: பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் அவர்கள்
(தலைவர் இந்து நாகரிகத்துறை, யாழ். ப. க.)

பிரதமவிருந்தினர்: பேராசிரியர் எஸ். பாலச்சந்திரன் அவர்கள்
(பதில் துணை வேந்தர், யா. ப. க.)

மதிப்புரை: சங்கீதபூஷணம் நா. வி. மு. நவரத்தினம (M. Phil) அவர்கள்
(தலைவர் இசைத்துறை, யா. ப. க.)
மஹா வித்துவான் பிரம்மஸ்ரீ ந. வீரமணி M. A. அவர்கள்

## அரங்கக் கலைஞர்கள்

பாட்டு: இசைக்கலைமணி திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன் அவர்கள்
(இசை ஆசிரியை, வண்ணை வைத்தீஸ்வரா கல்லூரி)

வயலின்: சங்கீத வித்துவான் செல்வி பாக்கியலக்ஷ்மி நடராசா (M. Phil) அவர்கள்
(விரிவுரையாளர், யாழ். ப. க.)

மிருதங்கம்: செல்வன் லக்மன் சத்தியமூர்த்தி
(யூனியன் கல்லூரி, மாணவன்)

கஞ்சிரா: சங்கீதரத்னம் எஸ். மஹேந்திரன் அவர்கள்
(விரிவுரையாளர், இ. நு. க. கழகம்)

கடம்: இசைக்கலைமணி எஸ். சிவசிவா அவர்கள் (இசை ஆசிரியர்)

மோர்ச்சிங்: கலாவித்தகர் வ. ரமணா அவர்கள்

தபேலா: இசைக் கலைமணி என். மதிரூபன்
(அதிதி விரிவுரையாளர், இ. நு. க. கழகம்)

தம்புரா: இசைப்பேரரசு கே. ஆர். நடராஜா அவர்கள்
(அதிதி விரிவுரையாளர். இ. நு. க. கழகம்)

உறவினர்கள், நண்பர்கள் இசை ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திரு செ. சத்தியமூர்த்தி (ஆசிரிய ஆலோசகர்)
திருமதி கஜநிதி சத்தியமூர்த்தி
கோண்டாவில் மேற்கு.
கோண்டாவில்.

(சி/10990)

# கைதான மலையக இளைஞர்களை உறவினர் பார்வையிட அனுமதிக்குக!

## ஜனாதிபதியிடம் சந்திரசேகரன் கோரிக்கை

கொழும்பு, பெப். 3

கைது செய்யப்பட்டுள்ள மலையக இளைஞர்களைப் பார்வையிடுவதில் ஏற்பட்டுள்ள சிக்கலான நடைமுறையை மாற்றி வருடக் கணக்கில் பிரித்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்களை அவரைச்சார்ந்தவர்கள் பார்வையிடுகின்ற வாய்ப்பினை யாவது ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்.

இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பெ. சந்திரசேகரன் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு அவர் இது தொடர்பாக அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மலையக இளைஞர்கள் கைது செய்யப்படுவதில் அநீதியும் பழிவாங்கலும் நடைபெறுவதை நாம் தங்களுக்குப் பல முறை சுட்டிக் காட்டியுள்ளோம்.

கைது செய்யப்பட்ட பல இளைஞர்கள் குற்றம் சாட்டப்படாமலும் வழக்குத் தொடரப்படாமலும் சிறையில் தண்டனையை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதனையும் தங்களின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கின்றோம்.

கைது செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் நடத்தப்படும் முறை குறித்தும் பல முறைப்பாடுகள் வந்த வண்ணமிருக்கின்றன. இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களை உறவினர்களோ, நண்பர்களோ பார்வையிடுவதற்கும் பல கெடுபிடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மிக அண்மைக்காலம் வரையும் விரும்பியவர்கள் போய்ப் பார்க்கக் கூடிய வசதி வழங்கப்பட்டிருந்தது. ஆனால் தற்போது அவர்களின் பெற்றோர்கள் கூட தங்கள் பகுதிப் பொலீஸ் நிலையக் கடிதத்தோடு தான் போகமுடியுமென்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஒவ்வொரு முறையும் சம்பந்தப்பட்ட பொலீஸ்நிலையக் கடிதத்தினோடேயே கைதிகளின் பெற்றோர்கள் கூடத் தடுத்து வைக்கப்பட்டவர்களைப் பார்க்க முடியுமென்ற அவல நிலை வேதனைக்குரியது.

இது மனிதாபிமானமற்ற நடவடிக்கை என்பதோடு, அடிப்படை மனித உரிமையும் கேலிக்குரியதாக ஆக்கப்படுவதாகவும் உள்ளது.

எனவே தற்போது இவர்களைப் பார்வையிடுவதில் ஏற்பட்டுள்ள இந்தச் சிக்கலான நடைமுறையை மாற்றி வருடக் கணக்கில் பிரித்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்களை அவரைச் சார்ந்தவர்கள் பார்வையிடுகின்ற வாய்ப்பினையாவது ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன் — என்றுள்ளது.

(இ-க)

## பயணப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டோர் விவரம்

யாழ்ப்பாணம், பெப். 3

யாழ். குடா நாட்டில் இருந்து வெளி இடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம் மாதம் 2 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு —

### சாவகச்சேரி

(120947 ஏ), (126244 ஏ), )127871 ஏ), (127871 பி), (127871 சி), (127901 ஏ), (127909 ஏ), (127909 பி), (127979 ஏ), (128003 ஏ), (128003 பி), (128003சி), (128003 டி), (128003 ஈ), (128003 எவ்), (128041 ஏ), (128041 பி), (128041 சி), (129805 ஏ), (129805 பி), (129805 ஏ), (129822ஏ), (129822பி), (129822சி), (129822டி), (129822ஈ), (129837ஏ), (129837பி), (129854ஏ), (129854பி), (129854சி), (129854டி), (129854ஈ), (129854எவ்), (129859ஏ), (129873ஏ), (129873பி), (129873சி), (129877ஏ), (129902ஏ), (129902பி), (129902சி), (129903ஏ), (129903பி), (129906ஏ), (129906பி), (129907ஏ), (129907பி), (129920ஏ), (120920பி), (129920சி), (129920டி), (129920ஈ), (129921ஏ), (129921பி), (129921சி), (329921டி), (129921ஈ), (129935ஏ), (129935பி), (129942ஏ), (129948ஏ), (129952ஏ), (129958ஏ), (129958பி), (129958சி), (129958டி), (129959ஏ), (129959பி), (129959சி), (129959டி), (129961ஏ), (129961பி), (129972ஏ), (129974ஏ), (129974பி), (129974சி), (129975ஏ), (129978ஏ), (129978பி), (129983ஏ), (129983பி), (129983சி), (129984ஏ), (129994ஏ), (129994பி), (129994சி), (129994டி), (129994ஈ), (129998ஏ), (129998பி), (130000ஏ), (131302ஏ), (131303ஏ), (131303பி), (131320ஏ), (131321ஏ), (131322ஏ), (131331ஏ), (131336ஏ) (131336பி), (131336சி), (131348ஏ), (131349ஏ), (131350ஏ), (131350பி), (131377ஏ), (131827ஏ), (131827பி), (130513ஏ), (130513பி), (130514ஏ) (130516ஏ) (130516பி) (130519ஏ), (130519பி), (130521ஏ), (130521பி), (130521சி), (130523ஏ), (130523பி), (131504ஏ), (131504பி), (131510ஏ), (131514ஏ), (131514பி), (131517ஏ), (134959ஏ), (134960ஏ), (125507ஏ), (129362ஏ), (129362பி),

### யாழ்ப்பாணம்

(120566ஏ), (120566பி), (120566சி), (120566டி), (128544ஏ), (128565ஏ), (128565பி), (128565சி), (128565டி), (128612ஏ), (128822ஏ), (130203ஏ), (130206ஏ), (130206பி), [130206சி), [130206டி], [130206ஈ], [130280ஏ], (130280பி), [130315ஏ], [130323ஏ], [130323பி], [130324ஏ], [130324பி], [130368ஏ], [130470ஏ], [130470பி], [130470சி], [130499ஏ], [130499பி], [131892ஏ], [132003ஏ], [132004ஏ], [132006ஏ], [132028 ஏ], [132035 ஏ], [132035 பி], [132036 ஏ], [132044 ஏ], [132048 ஏ], 132053 ஏ], [132054 ஏ], ]132068ஏ], [132068 பி], [132081 ஏ], [132088 ஏ], [132088 பி, [132088 சி], [132090 ஏ], [132101 ஏ], [132101பி], [132102 ஏ], [132125 ஏ], [132125 பி], [132892 பி], [132892 சி], [132892 டி],

### கரவெட்டி

(127633ஏ), (127000 ஏ), (127090 பி), (127725 ஏ), (127725 பி), (127839 ஏ), (127839 பி), (129578 ஏ), (129578 பி), (129611 ஏ), (129611 பி), (129690ஏ), (129690 பி), (129690 சி), (129693 ஏ) (129693 பி), (129721 ஏ), (129721பி), (129721 சி), (129795 ஏ), (129795 பி), (130851 ஏ), (130851 பி), (130862 ஏ), (130862 பி), (130874ஏ), (130881ஏ), (130902ஏ), (130914ஏ), (130914பி), (130973ஏ), (130973பி), (130976ஏ), (130976பி), (130976சி), (131018ஏ), (131082ஏ), (132457ஏ), (132758ஏ), (132759பி), (132759சி), (132759டி),

### மருதங்கேணி

(129372ஏ), (129373ஏ),

### நல்லூர்

(130349ஏ), (130349பி),

### பளை

(125468ஏ), (125468பி), (125468சி), (129366ஏ), [129366பி], [129377ஏ].

### பருத்தித்துறை

[125720ஏ], [129600ஏ], [129600பி], [129600சி], [129600டி], [129652ஏ], ]129652பி], [129652சி], [129734ஏ], [129762ஏ], (129762பி), (129793ஏ), (130856ஏ), (130931ஏ), (130931பி), (130945ஏ), (130945பி), (130981ஏ), (131006ஏ), (131006பி), (131039ஏ), (131047ஏ), (131052ஏ), (131088ஏ), (131104ஏ), (131104பி), (131104சி), (க)

### வாராந்த நிகழ்வில் நூல் வெளியீடு

கொழும்புத்துறை, பெப். 3

தொண்டாமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்து சமயப் பேரவைப் பொதுச் செயலாளர் சி. சக்திகிரீவன் யாத்த 'முருகன் புகழ்' நூல் வெளியீட்டு விழா நடைபெறும்.

இந்த நிகழ்விற்கு யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் தலைமை வகிப்பார்.

நல்லை ஆதீன குருமஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமஸ் சுந்தர தேசிகஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளின் ஆசியுரையும் —

இந்து சமயப் பேரவையின் தலைவர் அருட்கவி. சீ. விநாசித்தம்பியின் ஆளுரையும் —

உடுவில் பிரதேச செயலர் ஆ. மகாலிங்கத்தின் தொடக்க உரையும் பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆ. சிவசுவாமியின் வாழ்த்துரையும் — இடம்பெறும்.

யாழ். பல்கலைக்கழகம் மெய்யியல்துறைத் தலைவர் பேராசிரியர் நா. ஞானகுமாரன் வெளியீட்டுரையும் கல்வயல் கவிஞர் வே. குமாரசுவாமி மதிப்பீட்டுரையும் வழங்குவார்கள். இ-8 30)

# செய்திக் கொத்து

### நியமனம்

இளவாலை, பெப். 3

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் நடைபெற்ற நேர்முகப் பரீட்சையின் அடிப்படையில் கடந்த 24 ஆம் திகதி முதல் இளவாலைத் தபாலகத்துக்கு ஊழியர்கள் இருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே இங்கு தபால் ஊழியர் பற்றாக்குறை நிலவியதைத் தொடர்ந்து இந்த நியமனங்கள் யாழ். பிரதம தபால் அத்தியட்சகரால் மேற்கொள்ளப்பட்டன. (க-48)

### மரக்கன்றுகள் விநியோகம்

வலிகாமம்தெற்கு, பெப். 3

சுன்னாகம் தெற்கில் வாழும் 250 பேருக்கு தலா ஒவ்வொரு மாமுந்திரிகை கன்றும் தென்னங் கன்றும் வழங்கப்பட்டுள்ளன.

சுன்னாகம் தெற்கு காந்திருபன் சனசமூக நிலையத்தில் உள்ள முன்பள்ளி கட்டடத்தில் தலைவர் சி. சௌந்தரராயன் தலைமையில் வலிகாமம் தெற்கு பிரதேச சபைத் தலைவர் தி. மா. செல்வராசாவினால் இந்தக் கன்றுகள் மக்களுக்கு வழங்கப்பட்டன. (க-152)

### நீதிவான் எச்சரிக்கை

வலி வடக்கு, பெப். 3

மது விற்பனை நிலையத்துக்கான அனுமதிப் பத்திரத்தைப் புதுப்பிக்காது சாராய விற்பனையில் ஈடுபட்டவர் மல்லாகம் மாவட்ட நீதிவான் இ. த. விக்கினராசாவினால் கடுமையாக எச்சரிக்கப்பட்டார். தர்மப்பணமாக ஆயிரம் ரூபாவை தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய மகளிர் இல்லத்துக்குச் செலுத்துமாறும் அவருக்கு உத்தரவிடப்பட்டது.

இவ்வாறு எச்சரிக்கை செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டவர் மானிப்பாய் சங்கரப்பிள்ளை வீதியைச் சேர்ந்த நடராசா வசந்தரூபன் என்பவராவார்.

பிரஸ்தாப நபர் அரசாங்க சாராயத்தை அனுமதிப்பத்திரம் இன்றி விற்றதாக சுன்னாகம் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டிருந்தார். (க-86)

### சைக்கிள் திருட்டு

யாழ்ப்பாணம், பெப். 3

வீட்டு வாசலில் சைக்கிளை விட்டு விட்டு வீட்டுக்குள் சென்ற வேளை சைக்கிள் திருடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த 28 ஆம் திகதி பாண்டியன் தாழ்வில் இடம்பெற்றது. இத்திருட்டு தொடர்பாக பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (க - 30)

### யோகாசன வகுப்புக்கள்

யாழ்ப்பாணம், பெப். 3

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் வெள்ளி, சனி தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 6மணியில் இருந்து 7 மணி வரை ஆண், பெண் இருபாலாருக்கும் யோகாசன வகுப்புக்கள் நடைபெறுகின்றன. (க-30)

### நிதி உதவி

திருநெல்வேலி, பெப். 3

உரும்பிராய் இந்துக் கல்லூரியின் சேதமடைந்த நிலையிலிருந்த விளையாட்டு மைதானத்தை உரும்பிராய் லயன்ஸ் கழகம் சுமார் 40 ஆயிரம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்து கொடுத்துள்ளது.

இதேவேளை —

விளையாட்டு மைதானத்திலுள்ள கிணறு லயன் டாக்டர், எஸ். இந்திரராசா வழங்கிய 10ஆயிரம் ரூபா நிதியைக்கொண்டு புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-135)

### செயலகத்துக்கு சுற்று மதில்

வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்தின் பாதுகாப்புக் கருதி செயலகத்தைச் சுற்றி மதில் கட்டப்பட்டுவருகின்றது.

நீண்டகாலமாக இப் பிரதேச செயலகத்தின் எல்லை வேலிகள் பாதுகாப்பற்ற நிலையில் அழிவுற்றிருந்தன.

பிரதேச செயலகத்தின் ஒதுக்கு நிதியில் இருந்து தற்போது சுற்று மதில் கட்டப்பட்டுவருகின்றது. (க-152)

### தை அமாவாசை அபிஷேகம்

அகில இலங்கை விஸ்வகர்மகுல சங்கத்தின் தை அமாவாசையும் வருடாந்த பொதுக்கூட்டமும் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 10மணிக்கு கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் நடைபெறவுள்ளன.

இச் சங்கம் திருக்கேதீஸ்வரத்தில் நடத்திவந்த அமாவாசை அபிஷேகம் இம்முறை கைதடி சைவச் சிறுவர்இல்லத்தில் நடேசப் பெருமானுக்கு நடைபெற்று தொடர்ந்து பஜனை வழிபாடுகளும் இடம்பெறவுள்ளன. (க-10)

### கோரிக்கை

ஆவரங்காலில் இருந்து இராஜவீதி செல்லும் பாதையைத் திருத்தித் தருமாறு வலிகாமம் கிழக்கு பிரதேச சபையிடம் ஆவரங்கால் விவேகானந்தா சனசமூக நிலையம் கோரிக்கை விடுத்துள்ளது.

நீண்ட காலமாக சேதமடைந்துள்ள இந்த வீதியைப் பெருமளவு மக்கள் பயன்படுத்தி வருவதுடன் அச்சுவேலி கைத்தொழில் பேட்டைக்குச் சென்று வருவோர் இந்த வீதி ஊடாகவே சென்று வருவதனால் அவசரமாக இந்த வீதி திருத்தப்பட வேண்டும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (க-173)

### குளோரின் இடப்படுகின்றது

வேலணை பிரதேச சபையினால் வேலணைப் பகுதியிலுள்ள பொதுமக்கள் பாவிக்கின்ற குடி தண்ணீர்க் கிணறுகளுக்கு "குளோரின்" இடப்பட்டு வருகின்றது.

தற்பொழுது கிணறுகளில் நீர் நிரம்பியிருப்பதால் தொற்று நோய்கள் ஏற்படுவதைத் தடுக்கும் முகமாகவே குளோரின் இடப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (க-167)

உதயன்

## ஆணை எதற்காக?

விடுதலைப் புலிகளுடன் பேச்சு என்று வரும்போது, ஆயுதங்களைக் கீழே வைத்து விட்டுத்தான் வரவேண்டும் என்று அவர்கள் கேட்கப்படுவார்கள்.

படை அதிகாரிகள் பங்குபற்றிய மாநாடு ஒன்றில் உரையாற்றிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இவ்வாறு தெரிவித்திருக்கிறார். ஜனாதிபதியின் இந்தக் கருத்தைக் கேட்டதும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் விடுதலைப் புலிகளின் பங்களிப்பை அரசு உண்மையாகவே விரும்புகிறதா, அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமா என்ற சந்தேகம் சமாதான விரும்பிகள் அனைவருக்கும் தோன்றவே செய்யும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு விடுதலைப் புலிகளின் பங்களிப்பு அவசியம். அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தாமல் உருவாக்கப்படும் தீர்வை நடைமுறைப்படுத்துவது கடினம். இவற்றை அரசாங்கம் உணர்ந்துள்ளதாலேயே தனது தீர்வு முயற்சிக்கான செயல் அட்டவணையில் விடுதலைப் புலிகளுடன் பேசவும் வகை செய்துள்ளது என்று பலரும் நம்பினார்கள்; திருப்தியும் கொண்டார்கள்.

ஆனால் படை அதிகாரிகள் மத்தியில் ஜனாதிபதி வெளியிட்ட தகவல், பழையபடி வேதாளம் முருங்கை மரத்தில் ஏறித் துள்ளிக் குதித்துவிழுந்து முறிக்கப்போகிறது என்ற படத்தையே காட்டுகிறது.

ஜனாதிபதி சந்திரிகா தமது முந்திய ஐந்து வருட ஆட்சிக் காலத்தின்போது விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தும் விடயத்தில் சனம் பித்தம் சனம் வாதம் என்று அரசியல் குள இயல்போடு நடந்து கொண்டார். புலிகளுடன் பேசுவதற்குப் பல நிபந்தனைகளை விதித்தார்.

போராடிக் கொண்டிருக்கும் இரண்டு தரப்புகள் பேச்சு வார்த்தை நடத்தி சமரசத்துக்கு வரவேண்டுமாயின் போர் நிறுத்தம் அவசியம். அப்போது தான் பேச்சு வார்த்தைக்கான சுமுகமான சூழ்நிலையை உருவாக்க முடியும்.

அவ்வாறு செய்யாது, போரையும் நடத்திக் கொண்டு பேச்சுக்களை நடத்த முனையும் அரசாங்கம், அடுத்த தரப்பு மீது நிபந்தனை விதிப்பது, (அதுவும் ஆயுதங்களைக் கீழே வைத்து விட்டு வரவேண்டும் என்று கேட்பது) பேச்சு வார்த்தை தேவையில்லை என்ற நிலைமைக்கே கொண்டு செல்லும். விடுதலைப் புலிகளை ஆயுதங்களைக் கீழே வைக்குமாறு கேட்கும் அரசாங்கம் நியாயத்துக்குத் தானும் அவ்வாறு செய்து காட்ட வேண்டும்.

தனக்கொரு நீதி பிறருக்கொரு நீதி என்ற போக்கில் அரசு செயற்படுமாயின், விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்கள் நடத்துவதற்கு அது விரும்பவில்லை என்பதே அர்த்தமாகி விடும். பொதுவாக நிபந்தனை இல்லாத பேச்சுக்களுக்கே இரண்டு தரப்பும் இணங்க வேண்டும்.

இருதரப்புகளும் முன்நிபந்தனைகளை விதித்துக்கொண்டிருந்தால், மூன்றாம்தரப்பு மத்தியஸ்தராகவோ அன்றி அனுசரணையாளராகவோ இப்பிரச்சினையில் உதவ முடியாமற் போய்விடும். அதன் விளைவு போர் தொடர்வதாகவும் நாடு மேலும் சீரழிந்து கொண்டிருப்பதாகவுமே முடியும்.

இனப்பிரச்சினையை சமாதான வழியில் தீர்க்குமாறு மக்கள் கொடுத்த ஆணை நாட்டைச் சீரழிப்பதற்காகத் தானா?

# கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டை கருத்தோடுகை கொண்ட பெருந்தகை

## மக்கள் பணிக்கு மதிப்பளித்த அண்ணா

பேரறிஞர் அண்ணாவின் சீரிய பண்புகளை நினைக்க நினைக்க நெஞ்சமெல்லாம் நெக்குருகும். காரணம், அவரின் குணநலன்கள் எல்லாம் குன்று போல விளங்கின. அன்பு அருவியாகி அனைவரையும் மகிழச் செய்தன; இன்னா செய்தாருக்கும் இனியவே செய்தன. தான் உயர்ந்து, தமது தம்பியரையும் அறிவாற்றலால்—செயல் திறத்தால்—உயரச் செய்தவர். இளகிய உள்ளமும் ஈர்த்துவக்கும் இயல்பும் இயற்கையாக அமைந்தவர். கடமையை நிறைவேற்றுவதிலும் கண்ணியத்தைக் காப்பதிலும் கட்டுப்பாட்டோடு நடந்து கொள்வதிலும் கருத்தோடு ஒழுகியவர். விட்டுக் கொடுக்கும் இயல்பால் விண்ணிலும் உயர்ந்து, பொறுமையால் புகழ் படைத்தவர். தோல்வியைக் கண்டு துவளாது, எதையும் தாங்கும் இதயத்தால் பெருமை கொண்டவர். செருக்கும் சினமும் கொள்ளாது, நேர்மையால் எத்தகையவரையும் ஈர்க்கும் நிகரில்லாப் பெருந்தகையராக விளங்கினார்.

அரசியல் நுட்பத்தால் மூதறிஞர் ராஜாஜியையும், சிந்தனை வளத்தால் தந்தை பெரியாரையும், எளிமையின் திருவுருவால் காமராசரையும், வேற்றுமையில் ஒற்றுமை காண்பதால் ஆசிய சோதியாம் நேரு—இந்திரா காந்தி ஆகியோரையும், நட்பின் நல்ல இலக்கணத்தால் சிலம்பின் செல்வர் ம. பொ. சி— அமைச்சர் சுப்பிரமணியம் போன்றோரையும், ஒருவனே தேவன் என்பதால் குன்றக்குடி அடிகளாரையும், நகைச்சுவையால் இலட்சோப இலட்சம் தம்பியரையும், இன்னும் கருத்து வேறுபாடு கொண்டு எதிர்த்த எல்லோரையும் தம்பால் இழுத்து மாண்பின் சிகரத்தில், பண்பின் உச்சியில் மாப்புகழ் கொண்டவர்.

பாரதப் பெருநாடு 1947 ஆம் ஆண்டு ஓகஸ்ட் திங்கள் வெள்ளையரின் பிடியிலிருந்து அரசியல் ரீதியாக விடுதலை



பேரறிஞர் சி. என். அண்ணாத்துரையின் முப்பத்தோராவது ஆண்டு நினைவு நாள் இன்றாகும். அதனையொட்டி இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.

பெற்றது. என்றாலும், நாட்டிலே — சமூகத்திலே — சமயத்திலே — பண்பிலே — பழக்கத்திலே விடுதலை கிடைக்கவில்லை. "எம்நாடு பொன்னாடு; ஏது இதற்கு ஈடு?" என்று திருப்புகழ் பாடினார்கள். ஆனால் மக்கள் அறியாமையால், பகுத்தறிவு இன்மையால் அடிமைகளாக வாழ்ந்து கொண்டிருந்தனர்.

நாடு மட்டுமல்ல, மக்களின் மனநிலை மாறிட வேண்டும்; மக்கள் சுதந்திரம் உடையவர்களாக விளங்க வேண்டும் என்று எண்ணினார் அண்ணா.

கூரிய வாள், பலமான கேடயம், அஞ்சா நெஞ்சு; ஆனால், அந்த வீரனின் விழி பழுதானால் நாட்டுக்குச் சிறப்பும் அளிக்காது — வெற்றியும் தராது; நல்லாட்சிக்குச் சிறப்பும் அளிக்காது— நல்லாட்சிக்கு வழியும் வகுக்காது. நாட்டு நிலை உலக நிலைக்கு ஏற்ப வளர்ந்தாக வேண்டும்; இதற்கு வீட்டு நிலை மாற வேண்டும்; உயர்ந்தாக வேண்டும் என விரும்பினார் அண்ணா.

இதற்குக் கல்வி அறிவு வளர வேண்டும். வீட்டிற்கோர் புத்தகசாலை — ஊருக்கோர் நூல்நிலையம் ஏற்பட வேண்டும். மலைகண்டு — மாநதி கண்டு அல்ல உலகம் மக்களை மதிப்பது. மக்களின் மனவளம் கண்டே மாநிலம் மதிக்கும். நாட்டின் மனவளத்தை வளர்க்க எழுத்தறிவு வேண்டும் என்றார். ஒரு நாட்டின் முன்னேற்றம் என்பது பொருள்வளம் — கருத்துவளம்— தொழில்நுட்ப வளம் முதலியவற்றில் தங்கியுள்ளது. எனவே, மக்களின் கல்விவளம் பெருகிட வேண்டும் என்றார்.

எனவே, மக்களின் கல்வி வளம் வளர்ந்து அறியாமை அகன்று, வறுமை நீங்கி மக்கள் இன்ப வாழ்வு வாழ்ந்திடத் தனது பேச்சு, எழுத்து ஆற்றல் முழுமையும் அவற்றுக்குப் பயன்படுத்தினார். அவற்றின் மூலம் பெண்ணடிமையைப் போக்கிட முயன்றார். மறுமணச் சட்டத்தை அரசியலில் அமுல் செய்து பெண்களின் இழிமையைப் போக்கினார் அண்ணா.

மதுவிலக்குச் சட்டத்தால் முப்பது கோடி வருமானத்தை அரசுக்கு இழந்து மூன்று கோடி மக்களின் இன்ப வாழ்வுக்கு வழி கோலினார்.

உலகில் உண்மையாக வளர்ந்துள்ள நாடுகளோ, திங்கள் மண்டல வெற்றியை முடித்துக் கொண்டு செவ்வாய் மண்டல ஆய்வில் இறங்கியுள்ளன. அணுவின் ஆற்றலை அழிவுக்குப் பயன்படுத்துவதை நிறுத்தி, ஆக்கப் பணிக்குச் செலவிட ஆய்வுகளை மேற்கொண்டுள்ளன. கணனிகள் என்ன, லேசர் கதிர்கள் என்ன இன்னும் என்ன புதுமைகளோ அத்தனையும் கண்டு கொண்டிருக்கின்றன.

நாமோ தேர்—திருவிழா— தீர்த்தம் எனக் காலத்தைக் கடத்துகிறோம். உலகில் எங்குமில்லாத சொர்க்கத்தைக் கற்பனை செய்து கொண்டிருக்கிறோம். அவை யாவும் மக்கள் பணியால் அணிசெய்து மகேசுர பூசையாக மாற்றிட வேண்டும் என்றார்.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்த குடி என்கின்ற புறப்பொருள் வெண்பாமாலை வரிகளை நினைவு படுத்தி, மொழி— கலை— கலாசாரம்— பண்பு அரசியல் — கோட்டை — கொத்தளம் முதலியவற்றால் உலகில் சிறந்து வழிகாட்டியாக வாழ்ந்த இனம் மீண்டும் அவற்றைப் பெற்று, உலகில் தமிழன் என்றொரு இனமுண்டு, தனியே அவர்கொரு நாடு உண்டு. அதற்குப் பகுத்தறிவு வேண்டும். அதனை அடைந்திட கல்வி வளர வேண்டும் என்று தனது வாழ்வினை அதற்கே அர்ப்பணித்தார் அண்ணா! ★

அ.பொ.செல்லையா

## கைத்தொழில் கண்காட்சி

யாழ். மாவட்டக் கைத்தொழில் துறையை ஊக்குவிக்கும் நோக்குடன் கைத்தொழில் அபிவிருத்திச் சபையும் தொழில் திணைக்களமும் இணைந்து யாழ்ப்பாணத்தில் மூன்று நாள்களுக்குக் கைத்தொழில் கண்காட்சி ஒன்றினை நடத்த உள்ளன.

இந்தக் கண்காட்சி ஏப்ரல் 9 ஆம், 10ஆம், 11 ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரியில் நடத்தப்படவுள்ளது.

கண்காட்சியில் பங்குபற்ற விரும்பும் கைத்தொழில் நிறுவனங்கள் தேசிய வீடமைப்பு அதிகாரசபைக் கட்டடத்திலுள்ள கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் மாகாண முகாமையாளருடன்தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

கண்காட்சியின் போது பொருள்களின் விற்பனையும் நடைபெறவுள்ளது. கண்காட்சியில் மிகச்சிறந்த கண்காட்சியகத்துக்கு பரிசு வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (இ-5)

## சாயி சிந்தனை

மனிதப்பிறவி என்பது ஆதர்சத்தை நிலைநாட்டத் தேவையானது. பிறருக்கு எடுத்துக்காட்டாக வாழ்வதற்கும், தெய்வீகமான முன்னுதாரணமாக விளங்குவதற்கும், புனிதமான வாழ்க்கை வாழவும் தேவையானது. இன்றைய மனிதன் தன்னுள் உறையும், தெய்வீகத்தை மறந்துவிட்டு வாழ்க்கை நடத்துகிறான்.

மனித உயர் குணங்கள் மறக்கப்பட்டு மிருக வாழ்க்கை வாழ்கிறான். ஏனெனில் அவனுள் கோபம், காமம், மோகம், பேராசை போன்ற தீயகுணங்கள் நிறைந்து இருக்கின்றன.

மனித வாழ்க்கை என்பது மிகவும் விலைமதிப்பானது. உள்ளிருக்கும் தெய்வீகம் அதனையும் விட மிக உயர்ந்தது.

இன்றைய மனித சமுதாயம் சில கடினமான காலத்தைக் கடந்து கொண்டிருக்கிறது. ஏனெனில் உள்ளிருக்கும் தெய்வீகத்தின் புனிதத்துவம் புரிந்து கொள்ளப்படாதது தான் காரணம்.

(ஆதாரம்: சனாதன சாரதி)

## யாழ். வர்த்தக தொழிலாளர் கூ. சங்கம்

யாழ்ப்பாணம், பெப். 3

யாழ். மாவட்டத்தில் இயங்கிய வர்த்தகத் திணைக்களம் மூடப்பட்டதைத் தொடர்ந்து இந்த திணைக்களத்தில் கடமையாற்றிய ஊழியர்களின் நன்மை கருதி யாழ். வர்த்தக தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரியில் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் பத்துக் கிளைகள் யாழ். மாவட்டம் முழுவதும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கூட்டுறவுத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள இந்தச் சங்கத்தில் தற்பொழுது 65 பேர் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளனர்.

## நாளை

தை 21

வெள்ளிக்கிழமை

திதி: சதுர்த்தசி

பிற்பகல் 5.46 வரை.

நட்சத்திரம்: உத்தராடம்

முன்இரவு 7.28 வரை.

நல்லநேரம்: 6.35 - 8.05

ராகுகாலம்: 11.05 - 12.35

(பஞ்சாங்கம் இரவு சுத்தம் பழைய நேரப்படி)

## இரு இளைஞர்கள் விளக்கமறியலில்

இரவு வேளை குடும்பஸ்தர் ஒருவரை வீதியில் வைத்துக் கூரிய ஆயுதத்தினால் தாக்கியமை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட, இருவரை இருவார காலம் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் எஸ். ஏ. ச. ஏகநாதன் உத்தரவிட்டார்.

புலோலி கிழக்கு சந்தா தோட்டம் என்ற இடத்தில் வைத்து அதே இடத்தைச் சேர்ந்த சித்திரதாஸ் உதயசுதன் (வயது 30) என்பவர், கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு தாக்கப்பட்டிருந்தார்.

இது தொடர்பாக, இதே இடத்தைச் சேர்ந்தவர்களான, சுதந்திரபோஸ் சுதர்சன் (வயது 18) அ. தேவதாஸ் (வயது 26) ஆகிய இருவரையும் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்த பருத்தித்துறை பொலிஸார் இவர்களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்திருந்தனர்.

கூரிய ஆயுதத்தினால் தாக்கப்பட்டுக் காயங்களுக்குள்ளான குடும்பஸ்தர் தற்பொழுது மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-109)

## உதய வாக்கு

அன்பிலே உண்மையுண்டு: அதுவே நீதி. அன்பின் ஆழத்திலே கட்டுப்படுத்தும், உறுதியும் உண்டு.

- கவி தாகூர்

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

இரத்தினம் சந்திரகுமார் ஊரெழு மேற்கு சுன்னாகம் என்ற முகவரியுடைய தேசிய, விசேட அடையாள அட்டைகள் (752673870V - 0903003973) சுன்னாகத்திற்கும், ஊரெழுவிற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து டயா எலக்ரோனிக்ஸ் கொம்பிளக்ஸ், இல. 6, பலாலி வீதி, திருநெல்வேலிச்சந்தி, எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (73335)

மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலய ஆசிரியர் கணபதிப்பிள்ளை என்பவரது சம்பளக் காசோலை(தொகை 7450/-) 01-02-2000 அன்று காலை 10 மணிக்கு சாவகச்சேரி வைத்திய சாலைக்கும் வங்கிக்கும் இடையில் கண்டி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் லக்ஸ்மி ரேடேர்ஸில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி/10895)

உரும்பிராய் மேற்கு அன்னுங்கையைச் சேர்ந்த ராஜி சின்னையா என்பவரது விஷேட அடையாள அட்டை (இல 0903028282) இணுவிலுக்கும் கோண்டாவிலுக்கும் இடையில் 28-01-2000 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்கூறிய முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (73256)

### விற்பனைக்கு

Java கொய்யா(1k) மற்றும் றோஸ் (பட்டன்) கன்றுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 204, (பு. நம் 508) கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம். (73336)

### வீடு விற்பனைக்கு

அல்வை வேவிலந்தை முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்திற்கு அருகில் சகல வசதிகளுடனும் அமைந்த ஏழு பரப்புடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு தொடர்பு:- V. K சவரி சீமா அல்வாய். 73308)

### மணமகன் தேவை

40 வயது பரணி மகட ராசி, பிரான்சில் வசிக்கும் அழகிய மணமகளிற்கு மணமகன் தேவை. சடித மூலம் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: 996, மே/பா உதயன், கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். (73332)

## அபிவிருத்தி குறித்த ஆலோசனைக் கூட்டம்

நெடுந்தீவு, பெப். 3

நெடுந்தீவு மேற்கு, மத்தி, கிழக்குப் பகுதிகளுக்கான அபிவிருத்தி குறித்த ஆலோசனைக்கூட்டம் எதிர்வரும் 8 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது.

8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மேற்குப் பகுதியிலும் – 9 ஆம் திகதி புதன்கிழமை மத்தியிலும் — மறுநாள் கிழக்குப் பகுதியிலும் நடைபெறவுள்ள மேற்படி கூட்டங்களில் சனசமூக நிலையங்கள், விளையாட்டுக்கழகங்கள் மற்றும் பொதுத்தாபனங்களால் ஒவ்வொரு பகுதியிலும் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்திகள் குறித்த ஆலோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டு ஆராயப்படும் எனக் கூறப்படுகின்றது.

பிரதேச சபைத் தலைவர் அ. வெ. அரியநாயகம் தலைமையில் மேற்படி கூட்டங்கள் நடைபெறவுள்ளன. (க-111)

## வடமராட்சிப் பகுதியில் சட்டவிரோத கசிப்பு விற்பனை; எண்மருக்கு அபராதம் விதிப்பு

நெல்லியடி, பெப். 3

வடமராட்சிப் பகுதியில், பல்வேறு இடங்களில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு விற்பனை செய்து வந்தனர் என்று கூறப்படும் எண்மரை அபராதம் செலுத்துமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் எஸ்.ஏ.ஈ, ஏகநாதன் உத்தரவிட்டார்.

திடல் இமையாணன் பகுதியில் 750 மில்லி லீற்றர் கசிப்பை வைத்திருந்ததாக சுவேந்திரன்- நகுலேஸ்வரிக்கு 2 ஆயிரம் ரூபாவும் —

பருத்தித்துறை 2 ஆம் குறுக்குத்தெருப் பகுதியில் 5 றாம்ஸ் கசிப்பை வைத்திருந்ததாக மார்க்கண்டு–கனகராசாவுக்கு ஆயிரத்து 500 ரூபாவும்—

நெல்லியடி மேற்கில் 500 மில்லி லீற்றர் அரச சாராயம் வைத்திருந்ததாக செல்வராஜா சிவனேஸ்வரிக்கு 750 ரூபாவும் —

இராசலிங்கம் வீதி, கரவெட்டி மேற்கில் 450 மில்லி லீற்றர் அரசசாராயம் வைத்திருந்ததாக கந்தையா – பரமேஸ்வரிக்கு 750 ரூபாவும்—

உடுப்பிட்டி வடக்கு சம்பர் மலைப் பகுதியில் 400 மீல்லி லீற்றர் கசிப்பு வைத்திருந்ததாக வில்வராசா - ஜெயந்திக்கு 750 ரூபாவும்—

இலந்தைக்காடு, சமரபாகு என்ற இடத்தில் 375 மில்லி லீற்றர் கசிப்பு வைத்திருந்ததாக சின்னப்பு - சுப்பிரமணியத்திற்கு ஆயிரம் ரூபாவும் —

சிலாப்புலம், கெருடாவில் தொண்டமானாறில் 375 மீல்லி லீற்றர் கசிப்பு வைத்திருந்ததாக உதயச்சந்திரன் - ஜீவமலருக்கு ஆயிரம் ரூபாவும்—

மண்டான் கரணவாய் மேற்கில் ஆயிரத்து 125 மீல்லி லீற்றர் கசிப்பு வைத்திருந்ததாக தேவராசா – தவராசாவுக்கு 4 ஆயிரம் ரூபாவும்—

அபராதமாகச் செலுத்துமாறு உத்தரவிட்ட நீதிவான், இவர்களைக் கடுமையாக எச்சரிக்கை செய்ததுடன், வடமராட்சிப் பகுதியில் உள்ள இளைஞர்கள், யுவதிகள் ஒன்று சேர்ந்து கசிப்பு விற்பனையை முறியடிக்கச்சேவை புரிய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

குறித்த சந்தேக நபர்களை, பருத்தித்துறை மதுவரி நிலைய பிரதான மதுவரிப் பரிசோதகர் என். சோதிநாதன், சார்ஜன் எஸ். சிவஞானம், மதுவரிக்காவலர்களான எம். மகிழ்ராஜன், எம். பி. ஸ்ரீ பவன் வி. சேனாதிராஜன் ஆகியோர் அடங்கிய குழுவினர், கைது செய்திருந்தனர்.

வழக்கு விசாரணையின் போது பருத்தித்துறை, நெல்லியடி, வல்வெட்டித்துறை ஆகிய பொலீஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளும் ஆஜராகி இருந்தனர். (க-109)

## பூசகரைத் தாக்கி நகைகள் திருட்டு

யாழ்ப்பாணம், பெப். 3

இரவு 8.30 மணிக்கு பூசகர் ஒருவரின் வீட்டினுள் நுழைந்த திருடர் கோஷ்டி வயதாளியான பூசகரையும் அவரின் மனைவியையும் மகளையும் அடித்துத்தாக்கி விட்டு அவர்களிடமிருந்து பெறுமதிமிக்க தங்க நகைகளையும் மற்றும் வீட்டுப் பொருள்களையும் திருடிச் சென்றுள்ளனர்.

அராலி வடக்கில் கடந்த சனிக்கிழமை இரவு இடம் பெற்ற இச்சம்பவத்தில் அடித்தாக்குதலுக்கிலக்காகிய மூவரில் பூசகரான ஜி. சிவசுப்பிரமணியசர்மா யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

## தீப்பந்த ஊர்வலம்

வவுனியா, பெப். 3

விசுவமடுவில் தீப்பந்த ஊர்வலமும், போர் எழுச்சிக் கூட்டமும் கடந்த திங்களன்று இடம்பெற்றுள்ளன.

கண்ணகிபுரம், புன்னை நீராவி, விசுவமடு மேற்கு, விசுவமடு கிழக்கு, பிரமந்தனாறு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானவர்கள் இதில் கலந்து கொண்டனர். (ஐ-க-3)

## புதிய அமைப்பு அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், பெப். 3

பாடசாலையை விட்டு விலகியவர்களின் நலன்கருதி புதிய அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

பாடசாலையைவிட்டு விலகியோர் முன்னேற்றச் சங்கம் என்னும் பெயரில் கடந்த மாதம் இந்த அமைப்பு முறைப்படி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இந்தச் சங்கத்தின் யாப்பு அங்கீகாரக்கூட்டம் எதிர்வரும் 6 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களுக்குத் தொழில் வாய்ப்பினை ஏற்படுத்தவும் சுயதொழில் பயிற்சி மற்றும் வங்கிக் கடன் வசதிகளைப் பெற்றுக்கொடுக்கும் நோக்குடனுமே இந்தச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. [இ-5-30]

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம்: 26 - 02 - 1995

மறைவு: 31 - 01 - 2000

### செல்வி ஏஞ்சல் நடராஜா

(பண்டத்தரிப்பு தென் இந்தியத் திருச்சபை முகாமைக்குருவான ஜி. நடராஜாவின் மகள்)

மழலையின் திடீர் மரணச் செய்தி கேட்டு நாம் ஆழ்ந்த வேதனை அடைகின்றோம். அன்னாரது பிரிவுத் துயரால் வேதனையுற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு மழலையின் ஆத்மா சாந்தியடைய இறைமகன் இயேசுவை மன்றாடி நிற்கின்றோம்.

பண்டத்தரிப்பு
தென் இந்தியத் திருச்சபை ஊழியர்
மற்றும் சபைமக்கள்.

(73339)

## சக பொலீஸைத் தாக்கியதாக 4 பொலீஸார் நீதிமன்றில் ஆஜர்

யாழ்ப்பாணம், பெப். 3

பொலீஸ் நிலையத்தில் வைத்து கடமை நேரத்தில் பொலீஸ்காரர் ஒருவர் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட அதே பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த நான்கு பொலீஸாரை மொத்தம் 6 ஆயிரம் ரூபா காசுப்பிணையில் செல்லுமாறு நீதிவான் எஸ். ஏ. ஈ, ஏகநாதன் உத்தரவிட்டார்.

இது தொடர்பாக மேலும் ஒரு பொலீஸாருக்கு அழைப்புக் கட்டளை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 25 ஆம் திகதி இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் வல்வெட்டித்துறைப் பொலீஸ் நிலையத்தில் கடமையிலிருந்த சுனில் பண்டார என்ற பொலீஸ்காரரே தாக்கப்பட்டவர் ஆவார்.

இச் சம்பவம் தொடர்பாக, இதே பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த வீ. வீ. டீ. மனோ திசநாயக (வயது 28) ஏச். கே. சுபாஸ் சந்திர குமார (வயது 30), ஆர். டீ. டபிள்யூ. சரத் சந்திரசிறி (வயது 29), ஜீ. ஆர். காமினி சமன்குமார (வயது 30) ஆகியோரே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள் ஆவர்.

வல்வெட்டித்துறைப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி நேற்று முன்தினம் காலை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் முன்னிலையில் இவர்களை ஆஜர் செய்தார்.

தற்பொழுது விடுமுறையில் தென்பகுதி சென்றிருக்கும் என், ஜே. சுதத் (வயது 28) என்பவருக்கே அழைப்புக் கட்டளை அனுப்பப்பட்டுள்ளது.

குறித்த சந்தேக நபர்கள் நால்வரும் நீதிமன்ற அனுமதியைப் பெற்றாலன்றி யாழ். குடாநாட்டை விட்டு வெளியே செல்ல முடியாது என்று நீதிவான் உத்தரவிட்டு இம்மாதம் 16 ஆம் திகதிக்கு வழக்கு விசாரணையை ஒத்தி வைத்தார். (இ-109)

## பாடசாலைகளுக்கிடையிலான கண்காட்சிப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், பெப். 3

யாழ்ப்பாணம் விஞ்ஞான சங்கம் கடந்த 29 ஆம், 30 ஆம் திகதிகளில் நடத்திய பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான கண்காட்சிப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த முடிவுகளின் படி 'நாளையும் நாம் வாழ... என்ற தலைப்பிலான யாழ். இந்துக்கல்லூரி மாணவர்களின் காட்சிப்பொருளும் ''விமான இயக்கத்தின் அமைப்பு'' என்ற பெயரிலான உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி மாணவர்களின் காட்சிப்பொருளும் ஒரே புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும் ''நுளம்பும் அதன் தாக்கங்களும்'' என்ற பெயரிலான யாழ். இந்துக்கல்லூரி மாணவர்களின் காட்சிப்பொருள் மூன்றாம் இடத்தையும் பெற்றது.

இந்தப் போட்டியில் முதல் பத்து இடங்களைப் பெற்ற காட்சிப் பொருள்களுக்கு திறமைச் சான்றிதழ்களும் ஏனையவற்றுக்கு பங்குபற்றியமைக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணம் விஞ்ஞான சங்கத்தின் தேர்வுத் தலைவர் பேராசிரியர் பாலசுப்பிரமணியம் தலைமையிலான குழுவே இந்தப்போட்டி முடிவுகளை வெளியிட்டது. (இ-4)

## தசாக கிரஹயஜ்ஞ அழைப்பு



பிறப்பு 06 — 04 — 1948

மறைவு 25 — 01 — 2000

### திருமதி பாலசுப்பிரமணியகுருக்கள் ரதிரூபா

எம்மை விட்டுப் பிரிந்த ரதிரூபா அவர்களின் மறைவையொட்டிய நிகழ்வுகள்.

3 - 02 - 2000 திகதி காலை 9 மணிக்கு தசாகம்
4 - 2 - 2000 திகதி மாசிகம்
ஏகோதிஷ்டம்
05 - 02 - 2000 - சபிண்டீகரணம்
06 02 - 2000 ,, கிரஹயஜ்ஞம்

ஆகிய நிகழ்வுகளில் கலந்து 06 - 02 – 2000 திகதி மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்பாக கேட்டுக்கொள்கின்றோம்.

சா. பாலசுப்பிரமணிய குருக்கள்
முருக மூர்த்தி கோவில்
நுணசை,
மாதகல்.

விலாசம்:
சா. பாலசுப்பிரமணிய குரு
பிள்ளையார் கோவிலடி,
மாதகல் வடக்கு,
மாதகல்

(73346)

# மட்டு. பயணப் பாஸ் முறையை ரத்துச் செய்யுமாறு கோரிக்கை

## மனித உரிமை அமைப்பு ஜனாதிபதிக்குக் கடிதம்

மட்டக்களப்பு, பெப். 3

ஒரு பிரஜை அவனது நாட்டில் எப்பகுதிக்கும் தங்குதடையின்றிச் செல்வதற்கு உள்ள உரிமை நிராகரிக்க முடியாத அடிப்படை உரிமையாகும். எனவே மட்டக்களப்பு மாவட்டத்தில் அமுல்படுத்தப்படவிருக்கும் பிரயாண அனுமதி முறையை உடனடியாக ரத்துச் செய்யவும்.

மட்டக்களப்பு மாவட்ட மனித உரிமை காப்பு அமைப்பின் செயலாளர் சட்டத்தரணி கனக. நமநாதன் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு நீதிமன்ற கட்டடத்தொகுதியில் அமைந்துள்ள நூலக கேட்போர் கூடத்தில் மனித உரிமைகள் காப்பு அமைப்பின் நிர்வாகக் குழுக்கூட்டம் அதன் தலைவர் சட்டத்தரணி டி. சி. சின்னையா தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மட்டக்களப்பில் நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் பிரயாண அனுமதிப்பத்திரம் தொடர்பாக ஆராயப்பட்டு பின்வரும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் பிரயாண அனுமதி முறையை மனித உரிமைகள் காப்பு அமைப்பு எதுவித சந்தேகத்துக்கு இடமின்றி வன்மையாகக் கண்டிக்கிறது. இந்தப் பிரயாண அனுமதியானது தொடர்ச்சியாக இம்மாவட்ட மக்கள் அனுபவித்து வரும் சொல்ல முடியாத அவலங்களை மேலும் அதிகரிக்கவே செய்யும். இந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரஜைக்கும் அவன் எந்தவொரு இடத்துக்கும் செல்வதற்கு உரிமையுண்டு. இது அவனது அடிப்படை உரிமையாகும். எனவே இந்த அடிப்படை உரிமையை இந்தப் பிரயாண அனுமதி முறை மீறுவதாக உள்ளது.

(ஐ-21)

# கட்டடத் திறப்பு விழா

சண்டிலிப்பாய், பெப். 3

சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புனரமைப்புச் செய்யப்பட்ட கட்டடத் திறப்பு விழாவும், சிறுவர் பாதுகாப்பு நிதிய பயனாளிகளுக்கான கடன் கொடுப்பனவும் அண்மையில் சங்கத்தலைவர் பி. சூசைப்பிள்ளை தலைமையில் நடைபெற்றன.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் கா. சந்திரராசா இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு புனரமைப்புச் செய்யப்பட்ட கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் இணைப்பாளர் எஸ். பேரின்பநாதன், சண்டிலிப்பாய்ப் பிரிவு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் க. ஸ்ரீபதி சில்லாலை பங்குத் தந்தை அருட்திரு அல்ரன் றோக் அடிகளார் உட்பட மற்றும் பலர் இந்த வைபவத்தில் கலந்து கொண்டனர்.

(இ-135)

# புலமைப்பரிசில் பரீட்சை மீளாய்வுக்கு விண்ணப்பித்த மாணவனுக்கு கூடிய புள்ளிகள்

மட்டக்களப்பு, பெப். 3

5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் ஒரு மாணவன் மீளாய்வுக்கு விண்ணப்பித்த போது 175 புள்ளிகள் பெற்றிருப்பது தெரியவந்திருக்கிறது.

பேரின்பம் கோபிகிருஷ்ணா என்ற அக்கரைப்பற்று இராமகிருஷ்ணமிசன் கனிஷ்ட பாடசாலை மாணவன் தவணைப்பரீட்சைகளில் வகுப்பில் அதிகூடிய புள்ளிகளைப் பெறுவதாகவும் ஆனால் கடந்த வருடம் நடைபெற்ற 5ம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் 118 புள்ளிகளை மட்டுமே பெற்றதால் இம்மாணவன் பரீட்சையில் சித்தியடையவில்லை எனப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்திருந்தது.

இதனால் திருப்தியடையாத அப்பாடசாலை அதிபரும், ஆசிரியர்களும் பரீட்சை திணைக்களத்துக்கு மீளாய்வுக்கு விண்ணப்பித்தனர். இதனையடுத்து இம்மாணவன் 175 புள்ளிகள் பெற்றிருப்பதாகப் பரீட்சைத் திணைக்களம் அண்மையில் இப்பாடசாலை அதிபருக்கு அறிவித்திருக்கிறது. இம்மாவட்டத்தின் வெட்டுப்புள்ளி 120 ஆகும். அக்கரைப்பற்று கல்வி வலயத்திலேயே இம்மாணவனுக்கே அதிகூடிய புள்ளிகள் கிடைத்திருப்பது தெரியவந்திருக்கிறது.

இது தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு எழுதிய கடிதத்தில் பரீட்சை முடிவுகளை அறிவிக்கும்போது தவறான முடிவுகளை அறிவிக்காது பார்த்துக்கொள்ளுமாறு கேட்டுள்ளார்.

பரீட்சை முடிவுகள் பரீட்சார்த்திகளின் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டதாகும். பரீட்சைத் திணைக்களத்தில் இருப்பவர்கள் ஏனோதானோ என்று நடந்து கொள்வதால் இப்படி எத்தனை திறமைசாலி மாணவர்கள் பாதிக்கப்பட்டார்களோ என்று சந்தேகம் ஏற்படுகின்றது. எனவே இனிமேலாவது தங்களது திணைக்கள ஊழியர்கள் இத்தகைய தவறுகளை விடாது நடந்துகொள்ளுமாறு அறிவுறுத்தும்படி பரீட்சை ஆணையாளர் நாயகத்தை அவர் கேட்டுள்ளார்.

(ஐ)

# பாம்பு தீண்டி ஆசிரியை மரணம்

தனங்களப்பில் இருந்து இடம்பெயர்ந்து பூநகரி அரசபுரம் செம்மண்குன்று அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் கல்விபோதித்து வந்த ஆசிரியை ஒருவர் பாம்பு தீண்டி உயிரிழந்துள்ளார்.

பொன்னையா ரஞ்சித பவானி என்ற ஆசிரியையே உயிரிழந்தவராவார்.

(ஐ-த-3)

# விதவைகள் ஓய்வூதியப் பணி இனிப் பிரதேச செயலகங்களில்

வலி.கிழக்கு, பெப். 3

யாழ். மாவட்டத்தில் விதவைகள் ஓய்வூதியம் பெறுபவர்களுடைய கணிப்பீடுகள் எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி முதல் பிரதேச செயலகங்கள் மூலம் மேற்கொள்ளப்படவுள்ளன.

இது தொடர்பாக யாழ். அரச அதிபர் சகல பிரதேச செயலர்களுக்கும் சுற்றறிக்கை ஒன்றினை அனுப்பிவைத்துள்ளார்.

அச்சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இதுவரை கணவனை இழந்து ஓய்வூதியம் பெற்று வந்தவர்களுடைய சகல கணிப்பீடுகளும் அது தொடர்பான செயற்பாடுகளும் யாழ். மாவட்டச் செயலகத்திலேயே நடைபெற்று வந்தன.

ஆனால் எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி தொடக்கம் இது தொடர்பான கணிப்பீடு செயற்பாடுகள் என்பன அந்தந்தப் பிரதேச செயலகங்களிலேயே இதற்கென உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு நடைபெறவுள்ளன.

— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-180)

# ஓடுகள், கூரைத்தகடுகளை கப்பலில் ஏற்றப் பின்னடிப்பு

யாழ்ப்பாணம், பெப். 3

கூரைத் தகடுகள் மற்றும் ஓடுகளைக் கப்பலில் ஏற்றி வருவதற்குக் கப்பல் கம்பனிகள் பின்னடிப்பதால் மாவட்டத்துக்குத் தேவையான அளவுக்கு அவற்றை இங்கு கொண்டு வரமுடியாதுள்ளதாக கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபனத்தின் பிராந்திய முகாமையாளர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வருவதற்கென கொழும்பில் 30 ஆயிரத்துக்கும் அதிகமான கூரைத் தகடுகள் ஆறு மாதங்களுக்கு மேலாகத் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன என்றும் —

அவற்றை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரக் கப்பலில் இடம் ஒதுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பின்னடித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பருத்தித்துறைத் துறைமுகப் பகுதியில் இவற்றை இறக்குவதில் ஏற்படும் தாமதம் காரணமாக இந்த வகைப் பொருள்களைக் கப்பலில் ஏற்றிவர மறுப்புத் தெரிவிக்கப்படுவதாக அறியப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் உள்ள கட்டடப் பொருள் கூட்டுத்தாபனத்தில் தாராளமாக சிமெந்து கட்டுப்பாட்டு விலையில் விநியோகம் செய்யப்பட்டுவருகிறது.

கடந்த வருடம் ஒரு லட்சத்து 60 ஆயிரம் சிமெந்து பைக்கெற்றுக்களும் ஒரு லட்சம் கூரைத்தகடுகளும் யாழ்ப்பாணத்தில் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு அவர் மேலும் கூறினார்.

(ஐ-5)

# ஹெரோயின் வைத்திருந்தவருக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம்

மட்டக்களப்பு, பெப். 3

மட்டக்களப்பு காங்கேயன் ஓடையில் ஹெரோயின் போதைவஸ்து விற்பனை செய்த நபர் ஒருவருக்கு மட்டக்களப்பு மாவட்ட மேலதிக நீதிபதி கா. தட்சணாமூர்த்தி 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

ஈயப்பைக்கற்றில் அடைக்கப்பட்ட 52 ஹெரோயின் பொதிகளை விற்பனை செய்வதற்காகத் தன்வசம் வைத்திருந்ததாகக் காங்கேயன் ஓடையைச் சேர்ந்த சாகுல் ஹமீட் முகைதீன் என்பவரை கைது செய்த காத்தான்குடிப் பொலிஸார் மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

இவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட நூறு மில்லிக்கிராம் ஹெரோயினையும் பொலிஸார் நீதிமன்றத்தில் தடயப் பொருள்களாக சமர்ப்பித்தனர். ஹெரோயினை விற்பனை செய்வதற்காக வைத்திருந்த குற்றத்தை எதிரி ஒப்புக்கொண்டதையடுத்து அவருக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த மாவட்ட மேலதிக நீதிபதி இத்தொகையைக் கட்டத்தவறும் பட்சத்தில் எதிரி ஒருவருட கடுழியச் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என உத்தரவிட்டார்.

(ஐ-21)

# தமிழ்க்கைதிகள் விடயத்தில் பழிவாங்கும் மனோபாவம்!

## அரசுமீது கூட்டணி எம். பி. குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, பெப். 3

சிறைச்சாலைகளில் உள்ள தமிழ் கைதிகளுக்கு பாதுகாப்பு வழங்கத் தவறியுள்ள அரசு கைதிகளைப் பழிவாங்கும் மனோபாவத்தைக் கொண்டிருக்கின்றது என்று மட்டக்களப்பு தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் பி. செல்வராசா தெரிவித்துள்ளார்.

நீதி, அரசமைப்பு, விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸுக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே அவர் இப்படிக் கூறியுள்ளார்.

அவர் அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது.

மட்டக்களப்பு சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளை அனுராதபுரம் சிறைச்சாலைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிந்து மட்டக்களப்பு சிறைச்சாலைக்குச் சென்று கைதிகளைப் பார்வையிட்டேன்.

மட்டக்களப்புச் சிறைச்சாலையில் 53 தமிழ் அரசியல் கைதிகள் உள்ளனர். இவர்களில் 16 பேர் அண்மையில் களுத்துறை சிறைச்சாலையில் தாக்குதலுக்கு உள்ளான பின்பு மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டவர்கள்.

அனுராதபுரம் சிறைச்சாலைக்கு மாற்றப்படவுள்ள தகவல் அறிந்து கைதிகள் பெரும் கலக்கம் அடைந்துள்ளனர். 83 ஆம் ஆண்டில் வெலிக்கடைச் சிறைச்சாலையிலும் அண்மையில் களுத்துறைச் சிறைச் சாலையிலும் கைதிகள் மிருகத்தனமாகத் தாக்கப்பட்ட சம்பவங்களைப்போல் தாம் மீண்டும் தாக்கப்படலாம் என்ற அச்சத்தால் கலங்கிப்போய் உள்ளனர்.

தங்களை மட்டக்களப்பு அல்லது திருகோணமலை சிறைச்சாலைகளில் வைக்குமாறும் அனுராதபுரம் சிறைச்சாலைக்கு மாற்றவேண்டாம் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எனவே கைதிகளின் பாதுகாப்புக் கருதி மட்டக்களப்பு சிறையில் வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை அனுராதபுரம் சிறைச்சாலைக்கோ அல்லது தென்பகுதி சிறைச்சாலைகளுக்கோ இடம் மாற்றவேண்டாம் என கேட்டுக்கொள்கிறேன் — என்றுள்ளது.

(ஐ-21)

# மட்டு. மாவட்டத்தில் முறைசாராக் கல்விப் பிரிவு பயிற்சி நெறிகள் ஆரம்பம்

மட்டக்களப்பு, பெப். 3

மட்டக்களப்பு மாவட்டக் கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவு பாடசாலைக் கல்வியைத் தொடராத இளைஞர்களுக்கான முறைசாராக் கல்விப் பயிற்சி நெறியை நடத்தவுள்ளதாக மாவட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். எஸ். மனோகரன் தெரிவித்தார்.

பத்திரிகைத்துறை, புகைப்படம், வீடியோ, மின் இணைப்பு படவரைபு, தச்சுத்தொழில், மீன்பிடி, விவசாயம், தமிழ், ஆங்கில தட்டெழுத்து, சுருக்கெழுத்து, தையல், குளிர்சாதனம் திருத்துதல் உட்பட 17 பயிற்சி நெறிகள் முறைசாராக் கல்விப் பிரிவினரால் வழங்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

17 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம் என அவர் மேலும் தெரிவித்தார். மார்ச் மாதத்தில் பயிற்சி நெறிகள் ஆரம்பமாகும்.

(ஐ-21)

# மலேரியாவின் தாக்கம் அளவெட்டியில் அதிகரிப்பு

வலிகாமம் தெற்கு, பெப். 3

தெல்லிப்பழை சுகாதார வைத்தியர் பணிமனைக்கு உட்பட்ட அளவெட்டிப் பிரதேசத்தில் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளோர் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக சுகாதாரப்பகுதி வட்டார புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

அளவெட்டிப் பிரதேசத்தை அடுத்து கந்தரோடைப் பிரதேசம் மலேரியாநோய்த் தாக்கத்தில் இரண்டாம் இடத்தை வகிக்கின்றது.

வன்னி மாவட்டத்தில் இருந்து மீளக்குடியமரும் மக்கள் மலேரியா நோய்த்தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடாமல் இருப்பதே இந்த நோய் பரவக் காரணம் எனத்தெரிவிக்கப்படுகின்றது.

இப்பிரதேசங்களில் மலேரியா நோய் பரவுவதைத் தடுப்பதில் தெல்லிப்பழை சுகாதார வைத்தியர் பிரிவினரும், பொதுச் சுகாதார சேவைகள் பரிசோதகர்களும் ஈடுபட்டு வருகின்றனர்.

சுகாதாரப் பகுதியினரின் இந்த நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் கூடிய ஒத்துழைப்பு வழங்கவேண்டுமெனக் கோரப்பட்டுள்ளது.

கூடியளவு நுளம்பு வலைகளைப் பாவிக்குமாறும், மருந்துகளை ஒழுங்காக பயன்படுத்துமாறும், அடிக்கடி சுகாதார வைத்தியர்களைச் சந்தித்து மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுமாறும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(இ-152)

# குருநகர் வலைத் தொழிற்சாலையை இயக்குவதில் மீண்டும் இழுபறி நிலை!

யாழ்ப்பாணம், பெப். 3
குருநகரிலுள்ள சீ-நோர் தொழிற்சாலைக்கு மின்மானி பொருத்தப்படாததால் தொழிற்சாலையை இயக்குவதில் தாமதமேற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்தகால வன்செயல்களினால் சேதமடைந்திருந்த இந்தத் தொழிற்சாலைக் கட்டடங்கள் யாவும் புனரமைப்புச் செய்யப்பட்டதுடன் இயந்திர சாதனங்கள் பழுது பார்க்கப்பட்டுத் திருத்தம் செய்யப்பட்டுள்ளன.

இந்தத் தொழிற்சாலையை இயக்கும் பொருட்டு மின் இணைப்பு வேலைகளும் பூர்த்தியாக்கப்பட்டுள்ள போதிலும் மின்சார சபையினால் மின்மானி (மீற்றர்) பொருத்தப்படாமையினால் இதனை இயக்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

இந்தத்தொழிற்சாலை வளவில் மின்மாற்றி அமைப்பதில் படையினருக்கும், மின்சார சபைக்கும் இடையில் பல நாள்கள் நிலவிய இழுபறியின் பின்னர் மின்மாற்றி பொருத்தப்பட்டது.

தற்பொழுது இத்தொழிற்சாலையை இயக்குவதற்கான முழு வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்ட நிலையில் மின்மானி பொருத்துவதற்காகக் காத்திருக்க வேண்டியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-5))

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### திருமதி தனலக்குமி கதிரவேல்

(வடமராட்சி, உழைக்கும் மகளிர்சங்கத் தலைவி)

மண்ணகம்: 28 - 02 - 1930
விண்ணகம்: 05 - 01 - 2000

குடும்பத்து ஒளிவிளக்கே குலமகளே இலக்குமியே!
நடமாடும் தெய்வமே நம்மினிய அக்குமியே!
நிலந்தன்னில் உங்கள் நீள்பிரிவைத் தாங்காது
உளம்வாடித் துடிக்கின்றோம் உலகிலுமைக்
காண்பதெப்போ?

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்ளுகின்றோம்.

பிரிவால் துயருறும்:
ஆ. கதிரவேல் (J. P)
(கணவன்)
பெறாமக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இலக்குமி இல்லம்,
அல்வாய். (73326)

## தென்னிலங்கையர் அன்பளிப்பு

நெல்லியடி, பெப். 3
பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையின் அபிவிருத்தி வேலைகளுக்கென தென்னிலங்கை வாசி ஒருவர் 50 ஆயிரம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

தேசிய இளைஞர் சேவை மன்ற ஏற்பாட்டில் கடந்த வருட நடுப்பகுதியில் உறவுப் பால நிகழ்ச்சிக்கு இங்கு விஜயம் செய்த பத்திரிகையாளர்கள் இப்பாடசாலையில் நிலவும் சில குறைபாடுகளைக் கேட்டறிந்தபின் அது தொடர்பான செய்தி ஒன்றை 'லேக்ஹவுஸ்' பத்திரிகையில் அண்மையில் பிரசுரித்திருந்தனர்.

இதனைக் கண்ணுற்ற ராஜகிரியவைச் சேர்ந்த பிரசன்னடபிள்யூ. ஜெயவர்த்தன என்ற நபரே இப்பாடசாலையில் சேதமடைந்திருக்கும் ஆய்வுகூடம், நூலகம் போன்றவைகளை புனரமைக்கவென 50 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலையை மேற்படி பாடசாலை அபிவிருத்திச் சபைக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இவரது அன்பளிப்புக் குறித்து இப்பாடசாலை அதிபர், திருமதி சுந்தரேசன் பாராட்டுக் கடிதம் ஒன்றை அவருக்கு அனுப்பி வைத்துள்ளார். (க-109)

# ஊடகங்களுக்குச் செய்தி வழங்க அரச ஊழியருக்குக் கட்டுப்பாடு

கொழும்பு, பெப். 3
தகவல் திணைக்களப் பணிப்பாளரின் அனுமதியின்றி அரசாங்கத்தின் செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் குறித்து அரசாங்க உத்தியோகத்தர்கள் எந்தவிதமான செய்திகளையும் செய்தி ஊடகங்களுக்கு வழங்கக் கூடாது. அவ்வாறு தகவல்களை வழங்குவோருக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

தகவல், தொலைத்தொடர்புத்துறை அமைச்சர் மங்கள சமரவீர இவ்வாறு அறிவித்துள்ளார்.

தகவல் திணைக்களத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் அமுல் செய்யப்படும் நிர்வாகக் கோவையில் உள்ள சட்டத்தின்படி எந்தவொரு அரசாங்க உத்தியோகத்தரும் தமது திணைக்களத் தலைவர் அல்லது நிறுவனத் தலைவரது முன் அனுமதி பெறாமல் தமது கருத்துக்களை அச்சக, இலத்திரனியல் ஊடகங்களுக்குத் தெரிவிக்கக் கூடாது எனவும் —

இவ்வாறு செய்தி ஊடகங்களுக்கு வழங்கப்படும் செய்திகளைக் கூர்ந்து கவனிக்கவெனத் தகவல் திணைக்களம் விசேட பிரிவு ஒன்றை உடனடியாகத் திறந்து வைக்கவுள்ளது எனவும் —

நிர்வாகக் கோவையில் உள்ள இந்தச் சட்டத்தைத் துஷ்பிரயோகம் செய்பவர்கள் எவராக இருந்தாலும் அவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்

அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். (ஐ-7)

## பஸ் சேவை இன்று ஆரம்பம்

தென்மராட்சி, பெப். 3
யாழ். பஸ் நிலையத்தில் இருந்து எழுது மட்டுவாழ் வடக்கு வரையிலான பஸ் சேவை இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு எழுதுமட்டுவாழ் வடக்கு துர்க்கை அம்மன் ஆலய முன்றலில் இருந்து ஆரம்பித்து வைக்கப்படும்.

இந்த வைபவத்தில் வடபிராந்திய போக்குவரத்துச் சபை பொது முகாமையாளர் வி. எஸ். சொக்கலிங்கம் உட்படப் பலர் கலந்து கொள்வர். (க-117)

# நயினாதீவு ஆஸ்பத்திரியில் மருந்துக்குத் தட்டுப்பாடு

நயினாதீவு அரசினர் வைத்தியசாலையில் மருந்து வகைகளுக்குப் பெருந்தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வைத்தியசாலையில் முக்கியமாகத் தேவைப்படும் மருந்து வகைகள் நீண்ட நாள்களாக இல்லாமையினால் தொய்வு, இரத்த அழுத்தம், நீரிழிவு போன்ற நோய்களுக்கு தொடர்ந்து சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது.

இந்த நோயாளிகள் ஆயுள் காலம் முழுவதும் மருந்துகளைத் தொடர்ந்து பாவிக்க வேண்டியவர்கள். எனவே இவர்களுக்கு வேண்டிய மருந்து வகைகள் இந்த வைத்தியசாலையில் இல்லாமையினால் வெளியிடங்களில் கூடிய விலை கொடுத்தே மருந்துகளைக் கொள்வனவு செய்யவேண்டிய நிலையில் இவர்கள் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அத்தோடு இந்த நோயாளிகளுக்கு நோயின் தாக்கம் அதிகரிக்கும் பொழுது அவர்களைக் காப்பாற்றக் கூடிய ஊசி மருந்து வகைகளோ சேலைன் போன்ற வகைகளோ இந்த வைத்தியசாலையில் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்படியான நேரங்களில் நோயாளிகளை யாழ். போதனா வைத்தியசாலைக்கோ அல்லது ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலைக்கோ கொண்டு செல்வதானால் உடனடியாகக் கடற்போக்குவரத்திற்குரிய படகினையோ வாகனங்களையோ ஒழுங்கு செய்வது மிகவும் சிரமமான காரியமாகும்.

இதனால் சில வேளைகளில் உயிரிழப்புகளும் ஏற்பட இடமுண்டு.

எனவே வெளியிடங்களுடான போக்குவரத்து வசதி குறைந்த இப் பிரதேசத்தில் இயங்கும் வைத்தியசாலைக்கு போதிய மருந்து வகைகளைக் களஞ்சியப்படுத்தி வைத்தால் மாத்திரமே இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படாதிருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-167)

## பாலஸ்தாபனம்

கைதடி மத்தி பாலாம்பிகை ஆலயம் தைப் பொங்கலன்று பாலஸ்தாபனம் செய்யப்பட்டுத் திருத்த வேலைகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன.

கர்ப்பக் கிருகம் பூரணமாக வெண்பொழி கற்களால் அமைக்கப்படுகின்றது. (க-74)


உ
ஸ்ரீராம ஜெயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் தை மாதம் 24 ஆம் திகதி (7-2-2000) திங்கட்கிழமை பகல் 9-45 மணிமுதல் 11-15 மணி வரையுள்ள சதய நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

திரு. திருமதி சிவஸ்ரீ
சு. திருமலைசாமி சர்மா
அவர்களின்
கனிஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**சிவானந்த சர்மா**
(சிவா)
(பிரம்ஸ்ரீ ரேடிங், தொழில் அதிபர், கிளாங், மலேசியா)



திரு. திருமதி சிவஸ்ரீ
வி. சோமசுந்தர ஐயர்
அவர்களின்
சிரேஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**தனலக்ஷ்மி**
(பிரேமா)
(ஆசிரிய மாணவி, பலாலி ஆசிரியபயிற்சி கலாசாலை)

இருவருக்கும் இறைவன் திருவருளால் நுணாவில் மத்தி கந்தசுவாமி (வைரவர்) ஆலய மண்டபத்தில் நடைபெற இருக்கும் திருமாங்கல்ய வைபவத்தில் தங்கள் குடும்ப சமேதராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி
மங்களம்மா திருமலைசாமி சர்மா
(கணேச ஐயர்)
(குடும்பம்)
பருத்தித்துறை வீதி,
கோப்பாய்.

திருமதி
சியாமளா சோமசுந்தர ஐயர்
(குடும்பம்)
சரஸ்வதி கல்வி நிலையம்,
நுணாவில் மத்தி,
சாவகச்சேரி.

(இருவீட்டார் அழைப்பு)
★ தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும். (73329)


## மங்களகரமான ஆரம்பம்

**நிஷா** தொலைத் தொடர்பு நிலையம்

இன்று (03—02—2000) வியாழக்கிழமை
காலை 10.00 மணிமுதல் வரும்
சுப வேளையில்

**நிஷா தொலைத் தொடர்பு நிலையத்தை**
ஆரம்பிக்கின்றோம்.

மிகவும் அமைதியான சூழலில் உங்கள்
உறவினர், நண்பர்களுடன் உடன் தொடர்புகொள்ள

**நிஷா தொலைத் தொடர்பு நிலையம்**

கண்டி வீதி, மிருசுவில்.
தொலைபேசி இல. 070 - 212879
0094 - 212879

டச்சு வீதி, சாவகச்சேரியில்.
தொலைபேசி இல. 070 - 212414
0094 - 212414

(73337)

இங்கிருந்து திருமலைக்கு

# ஒன்று விட்டு ஒருநாள் பயணிகள் கப்பல் சேவை

## இம்மாத நடுப்பகுதியில் ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம்,பெப்ரவரி 3

**காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையில் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் கொடியுடன் இம்மாதம் 15ஆம் திகதிக்குப் பின்னர் பயணிகள் கப்பல் சேவை ஆரம்பமாகவுள்ளது.**

இந்தச் சேவையில் ஈடுபடுவதற்கு தயாராக ஜப்பானியக் கப்பல் ஒன்று கொழும்பு துறைமுகத்தில் இப்போது தரித்து நிற்கின்றது.

550 பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடிய இந்தக் கப்பல் காங்கேசன்துறையிலிருந்து மூன்று நாள்களும் திருகோணமலையிலிருந்து மூன்று நாள்களும் சேவையில் ஈடுபடும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இரு இடங்களுக்குமிடையில் 8மணித்தியால நேரத்தில் பயணத்தைப் பூர்த்தி செய்யும் இக்கப்பலில் முதலாம் வகுப்பில் 200 பேரும் சாதாரண வகுப்பில் 300 பேரும் பயணம் செய்யக் கூடியதாக இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

திங்கட்கிழமைகளில் காலை 6மணிக்கு திருகோணமலையிலிருந்து புறப்படும் கப்பல் செவ்வாய்க்கிழமைகளில் காங்கேசன்துறையிலிருந்து புறப்படவுள்ளது.

இவ்வாறு மாறிமாறி இரு இடங்களுக்குமிடையில் இந்தச் சேவை இடம்பெறவுள்ளது.

ஞாயிற்றுகிழமைகளில் மட்டும் கப்பல் சேவை நடைபெறமாட்டாது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சேவையை தொடர்வதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் -

கடற்படையினரின் ஒழுங்குகள் பூர்த்தியானதும் கப்பல் சேவை ஆரம்பமாகும் என்றும் -

யாழ். சிவில் நிர்வாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

காங்கேசன்துறை - திருகோணமலை சேவையில் ஈடுபடுவதற்கென சிங்கப்பூரிலிருந்து ஏற்பாடு செய்யப்பட்டு வரும் இரு கப்பல்களுக்கும் மேலதிகமாக இக்கப்பலும் சேவையில் ஈடுபடும் என்றும் -

அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

(உ-5)

தொழில் பயிற்சி முடித்த

# 440 இளைஞர், யுவதிகளுக்கு வங்கிக் கடன் வழங்கப்படும்

யாழ்ப்பாணம்,பெப்.3

கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் கடந்த வருடம் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக நடத்தப்பட்ட தொழிற் பயிற்சிகளைப் பூர்த்தி செய்திருக்கும் 440 இளைஞர் மற்றும் யுவதிகளுக்கு இலங்கை வங்கி ஊடாக கடன் உதவி வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு வைபவரீதியாக யாழ்ப்பாணத்தில் இம்மாத இறுதியில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவென கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கொழும்புத் தலைமைச் செயலகத்திலிருந்து உயர் அதிகாரிகள் அடங்கிய குழு யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளது. (உ-5)

## செஞ்சிலுவை கப்பலில் தபால்கள்

நேற்று காங்கேசன்துறைக்கு வந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 100 பொதிகள் எடுத்துவரப்பட்டுள்ளன.

இதே கப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட தபால்கள் அடங்கிய 82 பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தபால் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(இ-10)

## எக்ஸ்றே பிலிம் ஆஸ்பத்திரியில் பற்றாக்குறை

யாழ். போதனா வைத்தியசாலை எக்ஸ்றே பிரிவில் ஏற்பட்டுள்ள 'பிலிம்' பற்றாக்குறையினால் எக்ஸ்றே எடுப்பது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி அவசிய, அவசர நோயாளர்களுக்கு மாத்திரமே எக்ஸ்றே எடுக்கப்படுவதாகவும் -

கிளினிக் மற்றும் சாதாரண நோயாளர்களுக்கான எக்ஸ்றே எடுக்கும் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் -

எக்ஸ்றே பிரிவு வட்டாரத்தில் இருந்து தெரியவந்தது.

இது பற்றி சகல பிரிவு டாக்டர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

தற்போது கையிருப்பில் இருக்கும் பிலிம் இன்னும் ஒரு வார காலத்திற்கு மாத்திரமே போதுமானது என்றும் கூறப்பட்டது.

# விமானப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.3

பலாலி - கட்டுநாயக்கா விமான சேவையில் மக்கள் பயணம் செய்வதற்கு விடுதலைப் புலிகளினால் விடுக்கப்பட்டிருந்த தடை தளர்த்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளதையடுத்து விமானங்களில் பயணம் செய்வோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

யாழ். - கொழும்பு விமான சேவையில் பயணம் செய்வதற்கு இம் மாதம் 14ஆம் திகதிவரை யாழ். சிவில் நிர்வாக காரியாலயத்தில் பொதுமக்களினால் ஆசனங்கள் பதிவு செய்யப்பட்டு விமான டிக்கெட்டும் பெறப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

விமான டிக்கெட் பெறுவதற்கு தினமும் பெரும் எண்ணிக்கையானோர் யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அருகே காத்து நிற்பதையும் அவதானிக்கமுடிகிறது.(உ-5-8)

# பாடசாலைகளுக்குத் திரும்புமாறு மாணவருக்கு அதிபர்கள் அழைப்பு

## நிலைமையை விளக்கி அறிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.3

மாணவர்கள் பாடசாலைகளுக்கு உடன் திரும்பி தமது கற்றல் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என வடமாகாண அதிபர்கள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக அதிபர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எமது மக்களின் தனிப்பெரும் சொத்தான கல்விச் செயற்பாடுகளுக்கு ஊறுசெய்யும் எவரையும் எமது தமிழ்ச் சமூகம் பொறுத்துக்கொள்ளாது. ஆண்டாண்டு காலமாக கட்டிக்காத்து வளர்க்கப்பட்ட எமது கல்விப்பாரம்பரியம் யுத்தம் மூண்ட காலகட்டத்தில் கூடப் பத்திரப்படுத்திப் பாதுகாத்து வளர்க்கப்பட்ட தன்மையை யாரும் மறந்து விடமுடியாது. இந்நிலையில் அண்மையில் இடம்பெற்ற 'மாணவர் கைது' நிகழ்வுகளும் கல்லூரிப் பகிஷ்கரிப்புச் சூழ்நிலையும் அவற்றை குலைத்து விடுமோ என்ற ஐயச்சூழ்நிலை தோன்றியவுடன் அவற்றை நீக்க முனைந்த - எம்முடன் இணைந்து உழைத்து உதவிய - பல்வேறு தரப்பினருக்கும் நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

பல்வேறு அழுத்தங்களாலும் யுத்த சூழ்நிலையாலும் ஏற்கனவே மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட எமது பாடசாலை மாணவர்களின் கல்வி வாய்ப்புக்கள் தொடர்ந்தும் பாதிக்கப்படாதவாறு பார்த்துக் கொள்வதற்காக நாம் மிகக் கவனமாகச் செயற்படவேண்டியவர்களாக உள்ளோம். நவீன தொழில் நுணுக்க - இலத்திரனியல் துறையூடான உலகக் கல்வி வளர்ச்சியுடன் ஒப்பிடுகின்ற போது நாம் அவற்றை வேகமாக 'ஓடிப்பிடிக்க' வேண்டிய அவசியத் தேவையும், அவற்றுக்கான வழிவகை பற்றிய ஆய்வுகளும், முயற்சிகளும் அவற்றுக்கான செயற்பாடுகளும் -

'புதிய கல்விச் சீர்திருத்தம்' என்ற வகையில் செயற்படும் போது நாம் அவற்றில் பின் தங்கிவிடாதவாறு எம்மைக் காத்துக்கொள்வதும் - அவசியமாகின்றன.

இதனால் நாம் இழந்த கல்வியை மீட்க எமது மாணவர் சமூகம் உடன் பாடசாலைகளுக்குத் திரும்பி, தமது கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். அதற்குப் பெற்றோர்களும் உரியவகையில் வழிகாட்டவேண்டும்.

-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

# 14ஆம் திகதி வரைக்கும் விமான டிக்கெட் இல்லை!

யாழ்ப்பாணம்,பெப்.3

யாழ். - கொழும்பு விமான சேவையில் பயணம் செய்வதற்கு இம்மாதம் 14ஆம் திகதிவரை டிக்கெட்டுக்கள் முழு எண்ணிக்கையில் வழங்கப்பட்டுவிட்டதாகவும் அத்திகதி வரை இனிமேல் எவருக்கும் டிக்கெட் வழங்கப்படமாட்டாது என்றும் யாழ். சிவில் நிர்வாக அதிகாரி தெரிவித்தார்.

மரணச் சடங்குகளுக்கு செல்பவர்களுக்கு மட்டும் தினசரி இரண்டு விமான சேவைகளிலும் எட்டு ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் சொன்னார்.

அரச திணைக்கள அதிகாரிகள் அலுவலக விடயமாகவோ அல்லது நேர்முகப் பரீட்சைகளுக்கோ செல்ல வேண்டிஇருந்தால் தமது திணைக்களங்களுடன் தொடர்பு கொண்டு பிறிதொரு திகதிக்கு அதனை மாற்றுமாறும் அந்த அதிகாரி ஆலோசனை தெரிவித்தார்.

யாழ். - கொழும்பு விமான சேவைக்குப் பயணிகள் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் மூன்றாவது விமான சேவையையும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. எனினும் இது தொடர்பான இறுதி முடிவை விமானப் படையினரே எடுக்க வேண்டியுள்ளது என்றும், இதன் பின்னரே மூன்றாவது விமான சேவை ஆரம்பிக்கப்படும் என்றும் அந்த அதிகாரி மேலும் கூறினார். (உ-5)

# வரதராஜப்பெருமாளின் கொடும்பாவி வவுனியாக் கூட்டத்தில் நேற்று எரிப்பு

வவுனியா,பெப்.3

வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் அ.வரதராஜப்பெருமாளின் கொடும்பாவி ஒன்று நேற்று வவுனியா சிந்தாமணிப்பிள்ளையார் ஆலய வீதியில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டது.

இதற்கு முன்னர் வரதராஜப்பெருமாளின் கட்சி விரோத,மக்கள் விரோத நடவடிக்கைகளைக் கண்டிப்பதாகக் கூறி ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் சுரேஷ் அணியினர் நேற்று மேற்படி ஆலய வீதியில் பொதுக்கூட்டம் ஒன்றையும் நடத்தினர்.

இந்தக் கூட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பைச் சேர்ந்த மத்திய குழு உறுப்பினரும் வன்னிமாவட்ட செயலாளருமான என்.சிவசக்தி ஆனந்தன், மன்னார் மாவட்டச் செயலாளர் எஸ்.இரட்ணசிங்கம் குமரேஸ் மற்றும் அந்த அமைப்பின் பிரதிநிதிகள் சிலரும் உரையாற்றினர்.

"வடக்கு - கிழக்கில் தொடர்ந்து கொண்டிருக்கும் யுத்தம் நிறுத்தப்பட்டு பேச்சுவார்த்தை மூலம் - மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தின் ஊடாகத் - தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுதியாக இருக்கின்றது. அத்துடன் இதற்காக கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக எமது அமைப்பு பல்வேறு நெருக்கடிகளுக்கும் மத்தியில் ஜனநாயக ரீதியிலான அரசியல் போராட்டங்களையும் நடத்தி வந்துள்ளது.

"இவற்றை எல்லாம் சீர்குலைக்கும் வகையில்தான் வரதராஜபெருமாளின் இலங்கை வருகையும், கடந்த பத்து மாதகால செயற்பாடுகளும் அமைந்துள்ளன. கட்சித் தலைமையை கைப்பற்ற வேண்டும் என்ற பெருமாளின் குறி இன்று கட்சியை மிகவும் பாதித்துள்ளது.

"தனது பாதுகாப்பு விடயத்தை மட்டுமே கருத்தில் கொண்டு, கட்சியின் ஜனநாயக செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து, கட்சியை மீண்டும் ஆயுதமயப்படுத்துவதன் மூலம் குறுக்குவழியில் அதிகாரங்களைக் கைப்பற்றவும் அவர் நினைக்கின்றார்.

"இவ்விதமான வரதராஜப்பெருமாளின் நடவடிக்கைகள் சமூக வாழ்க்கைக்குள் இணைந்து - மக்களின் அன்றாட துன்பதுயரங்களைப் பகிர்ந்து -

கட்சிப் பணிகளை முன்னெடுக்கும் எமது கட்சி உறுப்பினர்களையும், ஆதரவாளர்களையும் மீண்டும் நாட்டை விட்டுக் கப்பலேறவும் - கொலைக்களத்தில் மாட்டிவிடுவதாகவும் அமைந்துவிடும்."

- இவ்வாறு நேற்றைய கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய உறுப்பினர்கள் பலரும் தெரிவித்தனர். (உ-7)

## தென்மராட்சிப் பகுதியில் 2 யுவதிகளைக் காணோம்!

யாழ்ப்பாணம்,பெப்.3

தென்மராட்சியில் இரு யுவதிகளையும் யாழ்ப்பாணத்தில் ஓர் இளைஞரையும் காணவில்லை என்று அவர்களின் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 11ஆம் திகதி கடைக்குப் போய் வருவதாகச் சென்ற கச்சாய் தெற்கு, கொடிகாமத்தைச் சேர்ந்த சுஜிதா அரியரட்ணம் (வயது 22), அல்லாரை தெற்கு, கொடிகாமத்தைச் சேர்ந்த மோகன காந்தி நடராசா (வயது 20) ஆகியோர் இதுவரை வீடு திரும்பவில்லை எனவும் -

யாழ்ப்பாணம் மவுண்கார்மல் வீதியைச் சேர்ந்த சூசைப்பிள்ளை, ஜெனாட் நிமல்ராஜ் (வயது 19) என்பவரைக் கடந்த முதலாம் திகதி தொடக்கம் காணவில்லை என்றும் - அந்த முறைப்பாடுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

## இளைஞர்கள் இருவர் கைது

யாழ்ப்பாணம்,பெப்.3

இரு இளைஞர்கள் இராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர்களின் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஏழாலை தெற்கு, மயிலங்காட்டைச் சேர்ந்த குணராசா மோகன் (வயது 31) என்பவர் கடந்த 28ஆம் திகதி ஊரெழு இராணுவத்தாலும் -

பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அமிர்தசாகரன் அருள் றெக்ஷன் (வயது 30) என்பவர் கடந்த முதலாம் திகதி 512ஆவது படைப்பிரிவினராலும் - கைது செய்யப்பட்டதாக அந்த முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

## நீதிமன்றத்தில் இளைஞர் ஆஜர்

காங்கேசன்துறை பயங்கரவாதத் தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவர் நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

1999 டிசெம்பர் 18ஆம் திகதி கடற் படையினரால் கைது செய்யப்பட்ட - ஓட்டுமடம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த - கந்தசாமி விமலசேனாதிராசா என்பவரே இவ்வாறு ஆஜர் செய்யப்பட்டார்.

இவரை ஏப்ரல் 26ஆம் திகதி வரை யாழ். சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா இம்மாதம் 14 ஆம் திகதி யாழ்.நீதிமன்றிலும் இவரை ஆஜர் செய்யுமாறு உத்தரவிட்டார். (உ-5)

## தொழில் முயற்சி பயிற்சிநெறி

யாழ்ப்பாணம்,பெப்.3

யாழ். பல்கலைக்கழகமும் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனமும் இணைந்து நடத்தும் தொழில் முயற்சியாளர்களுக்கான ஆறாவது தொழில் முயற்சியாண்மை பயிற்சி வகுப்பு விரைவில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சியில் பங்குபற்றுவதற்கு 47 தொழில் முயற்சியாளர்கள் விண்ணப்பித்துள்ளனர். இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 9ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சிநெறி யாழ். பல்கலைக்கழக சிற்றி ஹோலில் 14 நாள்களுக்கு நடைபெறவுள்ளது.

(உ-5)

## புதுமை மாதா தேர்ப் பவனி

குருநகர்,பெப்.3

யூபிலி யாத்திரைத் தலமான குருநகர் புதுமை மாதா ஆலயத் திருவிழா இன்று நடைபெறவுள்ளது.

காலை 5.00 மணிக்கு முதல் திருப்பலி பூசை நடைபெறும். 7.00 மணிக்குத் திருவிழா கூட்டுத்திருப்பலி யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் இடம்பெறும். தொடர்ந்து அன்னையின் திருச்சொரூபம் தேரில் வைத்து பவனியாக குருநகர் வீதிகளில் எடுத்துச் செல்லப்படும். அதன் பின்னர் திருச்சொரூப ஆசிர் இடம்பெறும்.

கடந்த 10 வருடங்களுக்குப் பின்னர் அன்னையின் திருச்சொரூப தேர்ப் பவனி இம்முறையே மீண்டும் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

(உ-51)

## டாக்டர்கள் திரும்புகின்றனர்

யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றி விடுமுறையில் சென்ற டாக்டர்களில் மேலும் இருவர் விடுமுறை முடித்து திரும்பி வந்துள்ளனர்.

நேற்று வந்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் கப்பலில் அவர்கள் வந்து சேர்ந்தனர்.

லீவில் சென்றுள்ள - எஞ்சிய - தென்பகுதி டாக்டர்களும் அடுத்த வாரமளவில் வந்து சேருவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ)

# வடக்கு, கிழக்கு டாக்டர்களும் வேலைநிறுத்தம் செய்ய முஸ்தீபு

## திங்களன்று குதிப்பர்

மட்டக்களப்பு,பெப்.3

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றும் வடக்கு - கிழக்கைச் சேர்ந்த டாக்டர்கள் எதிர் வரும் திங்கட்கிழமை முதல் தொடர்ச்சியான வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளனர்.

தென் இலங்கையில் இருந்து வந்து வடக்கு - கிழக்குப்பகுதிகளில் கடமையாற்றும் டாக்டர்களுக்கு அரசாங்கத்தினால் அண்மையில் அறிவிக்கப்பட்ட சலுகைகள் தமக்கும் வழங்கப்படவேண்டுமெனக்கோரியே இவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தில் யாழ்ப்பாணம், திருகோணமலைமற்றும்மட்டக்களப்பு,வவுனியா, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த டாக்டர்கள் ஈடுபடவுள்ளனர் என கிழக்கு மாகாண டாக்டர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றும் தென்னிலங்கையைச் சேர்ந்த டாக்டர்களுக்கு சம்பளத்துக்கு மேலதிகமாக அதேயளவு பணம் இடர்காலக் கொடுப்பனவாக வழங்கப்படுவதும் -

யாழ்ப்பாணத்துக்கான விமானச் சீட்டுக்கள் இலவசமாக வழங்கப்படுவதும் - தெரிந்தவையே.

தாமும் யுத்தப்பிரதேசத்திலேயே பணியாற்றுவதாகவும், ஏனைய டாக்டர்களுக்கு வழங்கப்படுவது போன்றே தமக்கும் சலுகைகள் வழங்கப்பட வேண்டுமெனவும் -

வடக்கு - கிழக்கு மாகாண டாக்டர்கள் கோரியுள்ளனர்.

இதேசமயம் மேற்படி வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஒன்று இன்று காலை மட்டக்களப்பில் நடைபெறவுள்ளது. (உ-7-21)

### எனது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்ல விரும்பினேன்.

அவர்கள் எங்கள் மூவரையும் காங்கேசன்துறைக்கு அழைத்துச் சென்றனர்.

பின்னர் அங்கிருந்து கொழும்புக்குக் கூட்டிச் சென்றனர். அங்குள்ள கட்டடமொன்றில் தங்க வைக்கப்பட்டோம்.

மறுநாள் எனது மகனின் படத்தைக் காட்டினர். எனது மகன் என அடையாளம் காட்டினேன். எனது மகன் குறித்த விவரங்களைக் கேட்டறிந்தனர். அதன் பின்னர் மறுநாள் என்னை அழைத்துச் சென்று தலை ஒன்றைக் காட்டினர். அது என் மூத்த மகனுடைய தலை என்று நான் அடையாளம் காட்டினேன்.

பின்னர் எனதும் பிள்ளைகளினதும் இரத்தத்தைப் பெற்று எனது மகனின் இரத்தத்துடன் சோதனை செய்ய வேண்டும் என்று தெரிவித்தனர். அதன்படி எமது இரத்தம் எடுக்கப்பட்டுச் சோதனைசெய்யப்பட்டது.

பின்னர் மஜிஸ்ரேட் முன்பாக வாக்குமூலம் அளித்தேன்.

கொழும்பில் தங்கவைக்கப்பட்ட நேரத்தில் நன்றாகப் பராமரிக்கப்பட்டோம். உரும்பிராயில் உள்ள எனது தங்கையுடன் ரெலிபோனில் கதைக்க வசதியும் கிட்டியது.

எமக்கு எந்தவிதமான துன்புறுத்தல்களோ நெருக்குதல்களோ தரப்படவில்லை. என்றாலும் மகனை இழந்த சோகத்தில் நாம் மூழ்கியிருந்தோம் - என்றார்

தமது கணவர் 90ஆம் ஆண்டு கவிலைக்கு சென்றார் என்றும்-

அங்கு இதுவரை அவருக்கு பிரஜாவுரிமை கிடைக்காததால் அங்கு தொடர்ந்து தங்கியிருக்கின்றார் என்றும் திருமதி வளர்மதி தெரிவித்தார். (உ-3)

### மாணவரும்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் அழைத்துவரப்பட்டனர்.

பலாலியில் வடபிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் குலசெனவிரத்ன முன்னிலையில் நேற்றுப்பிற்பகல் நடந்த கலந்துரையாடலுக்கு முதலில் அவர்கள் கூட்டிவரப்பட்டனர்.

யாழ். வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆர். வரதராஜன், அசாவிளான் மத்திய மகாவித்தியாலய அதிபர் ஆர். எஸ். நடராசா, உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை அதிபர் கே.ஆனந்தராசா, உரும்பிராய் மேற்கு கிராமசேவையாளர் ஏ.மகாலிங்கம் ஆகியோர் உட்பட பத்திரிகையாளர்களும் இதில் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் பிரிகேடியர் ஜெரக்டூட்டும் சமுகம் அளித்திருந்தார்.

அங்கு இடம்பெற்ற கலந்துரையாடல்களை அடுத்து கிராமசேவையாளர் மகாலிங்கத்திடம் அவர்கள் மூவரும் ஒப்படைக்கப்பட்டனர்.

(கொழும்பில் இருந்து இவர்களை அழைத்து வந்த புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் ஹாவத்த, காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உமகிலிய ஆகியோர் இவர்களைப் பின்னர் கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று அங்கு வைத்து உத்தியோகபூர்வமாக விடுவித்தனர்.

அதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட மூவரின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டன.

அந்த வாக்குமூலங்களில் ஈ.பி.டி.பியைச் சேர்ந்த வலிமேற்கு பிரதேச சபைத் தலைவர் யூதன் துணை சிங்கம் மற்றும் ஸ்ரீ ஆகியோரும், பிரதிக் கல்விப் பணிப்பாளர் என்.வரதராஜன், கிராமசேவையாளர் ஆகியோரும் ஒப்பமிட்டனர். (உ-3)

### பல்கலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் -

படுகாயமடைந்த ஐந்து மாணவிகள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் - கூறப்படுகின்றது.

சென்னையில் பல இடங்களிலும் ஐம்பதுக்கும் அதிக அரச பஸ்கள் அ.தி.மு.கவினரால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.

தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் பதற்றம் காணப்படுகின்றது. (உ-7)

### ஒரு வருட.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தின் கீழ் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தித் தனியாருக்கு இலாபம் ஈட்டிக் கொடுத்ததற்காக ஜெயலலிதா, செல்வகணபதி, பாண்டே ஆகியோருக்கு மேலும் ஒரு வருட சிறைத்தண்டனையும் -

அதற்கு ஆதரவு அளித்ததற்காக ஹோட்டல் இயக்குநர்களுக்கும் தலா ஒருவருட சிறைத் தண்டனையும் -

ஆவணங்களை மாற்றி அமைத்தமைக்காக செல்வகணபதிக்கு மேலும் 6 மாத சிறைத்தண்டனையும் - விதிக்கப்பட்டுள்ளது.

எனினும் ஐவருக்குமான இத்தண்டனைகள் ஏக காலத்தில் நிறைவேற்றப்பட வேண்டும் என்று நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்திருப்பதால் அனைவரும் கூடியது ஒரு வருட காலமே சிறையிருக்கவேண்டிவரும்.

இந்தத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்வதற்கு அடுத்த மாதம் 3ஆம் திகதி வரை காலக்கெடு வழங்கப்பட்டுள்ளது. அதுவரை தண்டனை நிறைவேற்றப்படுவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

தீர்ப்பை எதிர்த்துத் தான் மேன்முறையீடு செய்யப்போவதாக ஜெயலலிதா நேற்றுச் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்தியச் சட்டங்களின்படி ஒருவர் குற்றவாளியாகக் காணப்பட்டு இரண்டு வருடங்களுக்கு அல்லது அதற்குக் கூடிய காலத்துக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டால் தான் தேர்தலில் போட்டியிட முடியாதுபோகும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-க-6)

### ஒருவர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரைச் சுட்டார்.

"பின்னர் மீண்டும் துப்பாக்கியை இடுப்பில் மறைத்துக் கொண்டு அவரும் மற்றவரும் நடந்து சென்றனர். அப்போது இராமகிருஷ்ண ரோடின் முடிவில் கறுப்புக் கண்ணாடிகள் பொருத்தப்பட்ட 'சுப்பர் சுப்' ஜீப் ஒன்று காணப்பட்டது. பின்னர் திடீரென அந்த ஜீப்பைக் காணவில்லை. அதிலேயே கொலையாளிகள் தப்பிச் சென்றிருக்கக் கூடும்" - என்று அந்தச்சாட்சி தெரிவித்துள்ளார்.

"துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டதும் நான் வெளியே வந்து பார்த்தேன். அப்போது ஒருவர் துப்பாக்கியை இடுப்பில் செருகியபடி நடந்துகொண்டிருந்தார். இன்னொருவரும் அவருடன் சென்று கொண்டிருந்தார்" என்று மற்றைய சாட்சி தனது சாட்சியத்தில் தெரிவித்தார்.

### மன்னார் ஆயர் புலிகளுடன் பேச்சு

மன்னார் மாவட்ட ஆயர் வண. இராயப்பு யோசப் நாளை புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பிரதேசத்துக்கு விஜயம் செய்ய உள்ளார். அங்கு விடுதலைப்புலிகளின் பிரமுகர்களை அவர் சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மன்னாரிலிருந்து புறப்பட்டு நேற்று வவுனியா வந்தடைந்த மன்னார் ஆயர், பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் மேலும் சில பங்குத் தந்தைகளை தம்முடன் அழைத்துக் கொண்டு புலிகளின் பிரதேசத்திற்கு செல்கின்றார்.

அரசு - புலிகளுக்கு இடையே பேச்சுக்கு முயற்சித்து வரும் நோர்வே நாட்டு தூதுக்குழுவை இரத்தினபுரி ஆயர் மல்கம் ரஞ்சித்துடன் இணைந்து அண்மையில் சந்தித்துப் பேசிய பின்னர் மன்னார் ஆயர் புலிகளின் பிரதேசத்திற்கு செல்வது குறிப்பிடத்தக்கது.


எமது ஒரிஜினல் வீடியோ CD வெளியீடுகள்

* கண்ணூடப் போதுதைய்யா (Five Star)
* திருப்பதி ஏழு மலை வெங்கடேசா (Five Star)
* அதிசய பிறவி (பிரமிட்)

வீடியோ விமல்

யாழ்ப்பாணம்.

(c/10919)



வடமராட்சிக் கிளை நிறுவனம் இடம்மாற்றம்

நாவலர் மடம், நெல்லியடியில் இயங்கிவந்த எமது கிளை நிறுவனம் 5.02.2000 திகதி முதல 'கன்பொல்லை வீதி, கரவெட்டி வடக்கு, நெல்லியடி கரவெட்டி' என்னும் முகவரியில் உள்ள புதிய கட்டடத் தொகுதிக்கு இடம்மாற்றப் படுகின்றது என்பதை அறியத் தருகின்றோம்.

இயக்குநர்,

IIS. யாழ்ப்பாணம்.

(C/10917)



தரம் 03 முதல் 11 வரை ஒவ்வொரு வகுப்பிலும் ஒரு சில புதிய அனுமதிகள் பெப். 05 காலை 8மணிக்கு வழங்கப்படும்

-அதிபர்

(73296)



லிங்கன் ஸ்ரோர்ஸ்

இறக்குமதி செய்யப்பட்ட பிறந்ததின, திருமண வாழ்த்துமடல்கள் LAMINATING & FAX PAPER என்பன விற்பனைக்கு உண்டு.

லிங்கன் ஸ்ரோர்ஸ்

168,ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி. இல-3368

(C/10908)



அலுவலக உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், தொழில்சார் வல்லுநர்கள் ஆகியோருக்கான

பிரத்தியேக வகுப்புக்கள்

2000/2001 கல்வி ஆண்டுக்காக 5.2.2000 (சனிக்கிழமை) தொடங்க இருக்கின்ற எமது 1ஆம் பிரிவுக்கான பயிற்சி நெறிகளில் மேற்குறிப்பிட்டோருக்கான விசேட பிரத்தியேக வகுப்புக்கள் வார/வாரஇறுதி நாள்களில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

அலுவலக உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், தொழில்சார் வல்லுநர்கள் ஆகியோரின் வேண்டுகோளுக்கும் ஆர்வத்துக்கும் இணங்கவே இப்பிரிவுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இப்பிரிவினுள் எக்காரணம் கொண்டும் மாணவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்

* நிறுவன ரீதியாக மேற்குறிப்பிட்டோர் தொடர்பு கொள்ளும் சந்தர்ப்பத்திலும் வகுப்புகள் ஒழுங்கு செய்து தரப்படும்.

இயக்குநர்

IIS, 100, மணிக்கூட்டு வீதி,

யாழ்ப்பாணம். (C/10918)



STP COMPUTER WORLD

No. 54A, Palaly Road,
Kantharmadam,
Jaffna.

T.P:- 021-2674
E- mail:- stpcom@sltnet.lk
Reg.no: NAL/SD/377

சிறப்புப் புலமைப் பரிசில் திட்டம் - 2000

தேர்வுப் பரீட்சைகள் 06 - 02 - 2000 (ஞாயிறு)
காலை 10.00மணி

அனுமதிப்பத்திரங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அனுமதிப்பத்திரங்கள் கிடைக்கப்பெறாதவர்கள் காசுக்கட்டளை/ பணம் செலுத்திய பற்றுச்சீட்டுடன் அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும்.

இயக்குநர் 03-02-2000

(C/10913)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03-02-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.